வில்லிபுத்தூராரின்

ஆதி பருவம்

[கதைச் சுருக்கம்]

லிப்கோ வெளியீடு

பதிப்பகத்தார் :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
சென்னை-17.

பதிப்புரிமை] [விலை 4 அணா

முன்னுரை

இராமாயணமும், மகாபாரதமும் உலகக் காப்பியங்களுள் முதலிடம் பெறுவன. அவை முறையே வால்மீகி முனிவராலும், வியாச முனிவராலும் வடமொழியில் இயற்றப்பெற்றன. அவ்விரு கதைகளும் கற்போர் கருத்தைக் கவர்வன. எனவே, அவை தமிழ் மக்களின் உள்ளத்தில் உறுதியான இடம் பெற்று விட்டதில் வியப்பில்லை. அவ்விரு கதைகளையும் கடைச் சங்க காலத்திலேயே தமிழ் மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அக்கதைகளின் நிகழ்ச்சிகள் பலவற்றைத் தமிழ்ப் புலவர்கள் வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் எடுத்தாண்டுள்ளனர்.

பாரதக் கதை கடல் போல் பரந்ததொரு பெரு வரலாறு. அதன்கண் கிளைக்கதைகள் பல உள்ளன. அவற்றையெல்லாம் விரிவாகக் கூறுதல் எளிதன்று. எனினும், பாரதம் பாடிய பெருந்தேவனார், வில்லி புத்தூராழ்வார், நல்லாப்பிள்ளை போன்றவர்கள் அக் கதையைச் சுவைபடப் பாடியுள்ளனர். அவ்வாறு பாடப்பெற்ற பாரத நூல்களுள் வில்லிபுத்தூராழ்வார் பாடிய பாரதநூலே இன்று தமிழ்மக்களால் விரும்பிப் படிக்கப்படுகின்றது. அதற்குக் காரணங்கள் அந் நூலின் அழகும், ஆழமும், எளிமையும், ஏற்றமும், இன்னோசையும், சந்தமுமே ஆகும்.

வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதத்தை அடியொற்றி எழுதப்புகுந்த நூல்களுள் இது முதலாவதாகும். பாரதக் கதை நீளமானதாதலின், அஃது ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பெற்று, ஐந்து சிறு நூல்களாக வெளியிடப்படுகின்றது. ஐந்து சிறு நூல்களையும் தொடர்ச்சியாகப் படித்தால்தான் நூலின் போக்கும் கதைத் தொடர்ச்சியும் நன்கு விளங்கும்.

வில்லிபுத்தூராருடைய செய்யுட்களில் பாநலம் சொட்டும்; சந்த இன்பம் மிளிரும். அவருடைய அழகிய பாடல்களுட் சில, இடத்திற்கு ஏற்றவாறு குறிப்புரையுடன் இச்சிறு நூலின்கண் இடம் பெற்றுள்ளன.

இச்சிறு நூல்களின் வரிசையைத் தமிழுலகம் போற்றி வரவேற்கும் என்பது எம் நினைவு.

— பதிப்பகத்தார்.

பொருள் அடக்கம்

வில்லிபுத்தூரார் வரலாற்றுச் சுருக்கம்

பெண்ணையாற்றங்கரையைச் சூழ்ந்த பகுதி திருமுனைப்பாடி நாடு என்று பெயர் பெறும். அந்நாட்டைச் சேர்ந்த சனியூரில் வைணவ அந்தணர் குலத்தில் வில்லிபுத்தூராழ்வார் தோன்றினர். அவர் இளமையிலேயே தமிழ் மொழியை முறையாகக் கற்றவர்; சங்க நூல்களையும், பிற்காலக் காப்பியங்களையும் கற்றவர். வடமொழியிலும் அவருக்கு நல்ல புலமை இருந்தது. அவரது மைந்தராகிய வரந்தருவார் என்பவரும் நல்லிசைப் புலமை வாய்ந்தவராவார்.

வில்லிபுத்தூராழ்வாரை ஆதரித்தவன் வக்கபாகை என்னும் நாட்டை ஆண்டுவந்த வரபதி யாட்கொண்டான் என்பவன். அவன் தம்மை ஆதரித்த பான்மையைப் புலவர் தம் நூலில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

பாரதக் கதையினிடத்தே கொண்ட பற்றினால் அவர் இந்நூலைப் பாடியிருத்தல் வேண்டும். இந்நூலை அவர் பாடியமைக்குச் சில காரணங்களும் கூறப்படுகின்றன. அவற்றை உண்மை எனக் கோடற்குரிய சான்றுகள் கிடைத்தில. அவர் வாழ்ந்த காலம் 15-ஆம் நூற்றாண்டாகும். தமிழில் பாரத நூல்கள் சில உள்ளன. அவற்றுள் வில்லிபுத்தூரார் பாடிய பாரத நூலே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இதிலிருந்து அவ்வாசிரியரின் புலமையை நன்கு உணரலாம்.

பாரதப் பருவப் பெயர்கள்

வில்லிபுத்தூரார் பதினெட்டுப் பருவங்களையும் பாடினார் என்றும், அவற்றுள் எட்டுப் பருவங்கள் கிடைத்தில என்றும் சிலர் கூறுகின்றனர். இன்று நாம் காணும் வில்லிபுத்தூரார் பாரதத்தில் பத்துப் பருவங்களே உள்ளன. அவ்வாறு பருவங்களை அமைத்தமைக்குரிய காரணங்களைச் சுருக்கமாக அறிவோம்.

1. ஆதி பருவம் : குருகுலத்தவருடைய பழைய வரலாறு தொடங்கி, அருச்சுனன் காண்டவ வனத்தை எரித்தமை வரையில் உள்ள கதைப் பகுதி இப்பருவத்தில் அமைந்துள்ளது. குருகுலத்தோரின் பழைய வரலாற்றிலிருந்து தொடங்கப்பட்டுள்ள காரணத்தால் இப்பகுதி 'ஆதி பருவம்' என்று பெயர் பெற்றது.

2. சபா பருவம் : பாண்டவர் இராச சூய வேள்வி இயற்றிய நிகழ்ச்சியும், துரியோதனன் மண்டபம் ஒன்று கட்டி, அதனைக் காணப் பாண்டவரை அழைத்துச் சகுனியைக் கொண்டு சூதாடச் செய்து வெற்றிபெற்ற நிகழ்ச்சியும் இப்பருவத்தின்கண் இடம் பெற்றுள்ளன. சபையொன்று அமைக்கப்பெற்ற நிகழ்ச்சியே குறிப்பிடத் தக்கதாதலால், இப்பகுதி 'சபா பருவம்' என்று பெயர் பெற்றது.

3. ஆரணிய பருவம் : ஆரணியம் என்னும் சொல் காடு என்று பொருள்படும். பாண்டவரது காட்டு வாழ்க்கையை விளக்கும் பகுதியாதலால், இப் பருவம் இப்பெயரைப் பெற்றது.

4. **விராட பருவம்:** பாண்டவர் ஓராண்டுக் காலம் விராடனது நகரில் மறைந்து வாழ்ந்தமையைக் கூறுதலால் இப்பகுதி இப்பெயரைப் பெற்றது.

5. **உத்தியோக பருவம்:** பாண்டவர் தமக்குரிய நாட்டுப் பகுதியைப் பெறுதற்கு முயலும் பகுதியாதலால் இப்பகுதி இப்பெயரைப் பெற்றது.

6. **வீட்டும பருவம்:** வீடுமர் கௌரவர் படைக்குத் தலைமை தாங்கிப் போரிட்ட நிகழ்ச்சியைக் கூறுதலால் இப்பகுதி இப்பெயரைப் பெற்றது.

7. **துரோண பருவம்:** கௌரவர் படைக்குத் துரோணர் தலைமைதாங்கிய நிகழ்ச்சியைக் கூறுதலால் இப்பகுதி இப்பெயரைப் பெற்றது.

8. **கன்ன பருவம்:** கௌரவர் படைக்குக் கன்னன் தலைமை தாங்கிய நிகழ்ச்சியைக் கூறுதலால் இப்பகுதி இப்பெயரைப் பெற்றது.

9. **சல்லிய பருவம்:** கௌரவர் படைக்குச் சல்லியன் தலைமை தாங்கிய நிகழ்ச்சியைக் கூறுதலால் இப்பகுதி இப்பெயரைப் பெற்றது.

10. **சௌப்திக பருவம்:** ஸுப்தி = தூக்கம். யாவரும் உறங்கிய காலையில் நிகழ்ந்த செயலைக் கூறுதலால் இப்பருவம் இப்பெயரைப் பெற்றது.

ஆதி பருவச் சுருக்கம்

சந்திர வம்சத்தில் தோன்றிய அரசர்கள் பலர். அவர்களுள் புரூரவர், யயாதி, பூரு, துஷ்யந்தன், பரதன், குரு, சந்தனு, வீடுமன் முதலியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பின்பு வியாசரின் அருளால் திருதராட்டிரன், பாண்டு, விதுரன் ஆகியோர் தோன்றினர். திருதராட்டிரனது புதல்வர்கள் துரியோதனன் முதலிய நூற்றுவர். பாண்டுவின் புதல்வர்கள் தருமன் முதலிய ஐவர்.

துரியோதனன் பாண்டவர்கள்மீது பெரும்பகை கொண்டிருந்தான். எனவே, அவர்களைத் தொலைக்கப் பல சூழ்ச்சிகளைச் செய்தான். எனினும், அவர்களை ஒழிக்கமுடியவில்லை. பாண்டவர்களை அரக்குமாளிகையில் இருத்திக் கொல்வதற்குத் துரியோதனன் திட்டமிட்டபொழுது, பாண்டவர்களுள் ஒருவனாகிய வீமன் தன் உடன்பிறந்தவர்களைக் காப்பாற்றினான்; இடிம்பனைக் கொன்று, இடிம்பியை மணந்தான்; பகாசுரனைக் கொன்றான். பின்பு அருச்சுனன், இலக்கை வீழ்த்தி, திரௌபதியின் சுயம்வர மாலையைப் பெற்றான். அதன்பின் பாண்டவர் ஐவரும் திரௌபதியை மணந்தனர். அருச்சுனன் தான் செய்ததொரு பாவம் நீங்கும்பொருட்டுத் தீர்த்த யாத்திரை சென்று, பல பெண்டிரையும் மணந்து திரும்பினான். பின்னர் அவன் இந்திரனுக்கு உரிய காண்டவ வனத்தைத் தீக்கடவுள் எரித்தற்குத் துணை செய்தான். பாண்டவர்கள் செங்கோல் செலுத்திவந்தனர்.

கதையில் வருவோர்

புதன், புரூரவா, ஆயு, நகுடன், யயாதி, பூரு, துஷ்யந்தன், பரதன், அத்தி, குரு, சந்தனு : *சந்திர வம்சத்தில் தோன்றிய குறிப்பிடத்தக்க அரசர்களுள் சிலர்.*

கங்கை : *சந்தனுவின் மனைவி.*

வீடுமன் : *சந்தனுவுக்குக் கங்கையினிடம் தோன்றிய மகன் ; மணஞ் செய்துகொள்ளாமல் விரதம் பூண்டவன் ; எண்வகை வசுக்களுள் ஒருவனது தோற்றம்.*

பரிமளகந்தி : *சந்தனுவின் இரண்டாவது மனைவி.*

சித்திராங்கதன், விசித்திரவீரியன் : *சந்தனுவிற்குப் பரிமளகந்தியின் மூலமாகப் பிறந்த புதல்வர்கள்.*

அம்பிகை, அம்பாலிகை, அம்பை : *காசி மன்னனின் புதல்வியர். முன்னவர் இருவரும் விசித்திர வீரியனை மணந்தனர். அம்பை கன்னியாகவே தவஞ் செய்தாள்.*

சிகண்டி : *அலி. அம்பையே சிகண்டியாகத் தோன்றினள்.*

யாகசேனன் : *துருபதன் என்னும் வேறொரு பெயரை உடையவன் ; பாஞ்சால மன்னன் ; திரௌபதியின் தந்தை.*

பரசுராமர் : பெரு முனிவர் ; வில் வித்தையில் சிறந்தவர்.

வியாசர் : பாரதத்தை வடமொழியில் இயற்றிய பெருமுனிவர் ; பராசர முனிவருக்குப் பரிமள கந்தியினிடம் தோன்றியவர். இவரது அருளாலேயே திருதராட்டிரன், பாண்டு, விதுரன் ஆகியோர் பிறந்தனர்.

திருதராட்டிரன் : வியாசரின் அருளால் அம்பிகையினிடம் பிறந்தவன் ; பிறவிக்குருடன் ; பதினாயிரம் யானை வலிமை உடையவன் ; வஞ்ச நெஞ்சினன் ; துரியோதனன் முதலியோரின் தந்தை.

பாண்டு : வியாசரின் அருளால் அம்பாலிகையினிடம் பிறந்தவன் ; வெண்ணிறத்தவன் ; பாண்டவர்களின் தந்தை.

காந்தாரி : திருதராட்டிரனது மனைவி.

குந்தி, மாத்திரி : பாண்டுவின் மனைவியர்.

கன்னன் : குந்தி கன்னியாக இருந்த காலையில் சூரியனின் அருளால் தோன்றியவன்; பெரு வள்ளல்; துரியோதனனின் உயிர் நண்பன்.

இந்தமன் : பாண்டுவைச் சபித்து இறந்த முனிவர்.

தருமபுத்திரன் : அறக் கடவுளின் அருளால் குந்தியின் வயிற்றில் பிறந்த மகன்; பாண்டவர்களுள் மூத்தவன் ; நேர்மை உடையவன்.

வீமன் : வாயுதேவனின் அருளால் குந்தியினிடம் தோன்றியவன்; உடல் உரமும், வீரமும் வாய்ந்தவன்; பாண்டவர்களுள் ஒருவன்.

அருச்சுனன் : இந்திரனின் அருளால் குந்தியினிடம் தோன்றியவன்; பெரிய வில் வீரன்; அழகன்; பாண்டவர்களுள் ஒருவன்.

நகுலன், சகாதேவன் : அசுவினி தேவர்களின் அருளால் மாத்திரியின் வயிற்றில் பிறந்தவர்கள்; பாண்டவர்களுள் இறுதி இருவர்.

துரியோதனன் : திருதராட்டிரனுக்குக் காந்தாரியினிடம் பிறந்தவன்; கொடியவன்; வஞ்சகன்.

துச்சாதனன் : துரியோதனனின் தம்பியருள் ஒருவன்.

துச்சளை : துரியோதனனுடைய தங்கை.

சகுனி : துரியோதனனின் மாமன்.

கண்ணன் : திருமாலின் அவதாரம்; பாண்டவர்க்கு உற்ற துணைவர்.

வாசுகி : பாம்பரசன்.

கிருபாச்சாரியார் : பாண்டவர்க்கும், கௌரவர்க்கும் ஆசிரியராக இருந்தவர்.

துரோணர் : பாண்டவர்க்கும், கௌரவர்க்கும் வில்லாசிரியராக இருந்தவர்.

அசுவத்தாமன் : துரோணரின் மகன்.

ஏகலைவன் : ஒரு வேடன்; துரோணரது உருவத்தை முன் வைத்துக்கொண்டே விற்பயிற்சியை நன்கு பெற்றவன்.

திட்டத்துய்மன் : யாகசேனனது மகன்; வேள்வித் தீயிலிருந்து தோன்றியவன்;

திரௌபதி : யாகசேனனது மகள்; வேள்வித் தீயிலிருந்து தோன்றியவள்; பாண்டவர் ஐவரையும் மணந்தவள்.

புரோசனன் : வஞ்ச நெஞ்சுடைய அமைச்சன்; அரக்குமாளிகைக்குத் தீயிடும் சதித்திட்டத்தை நிறைவேற்ற முயன்றவன்.

இடிம்பன் : ஓர் அரக்கன். வீமனால் கொல்லப் பட்டான்.

இடிம்பி : இடிம்பனின் தங்கை; வீமனின் மனைவி.

கடோற்கசன் : வீமனுக்கு இடிம்பியினிடம் பிறந்த மகன்.

பகாசுரன் : ஓர் அசுரன்; வீமனால் கொல்லப் பட்டான்.

சித்திராதன் : ஒரு கந்தருவன்.

தௌமியர் : ஒரு முனிவர்; பாண்டவர்க்குத் துணை செய்தவர்.

நளாயினி, இந்திரசேனை : திரௌபதிக்கு முன்னிரண்டு பிறப்புக்களில் முறையே அமைந்த பெயர்கள்.

மௌத்கல்யர் : ஒரு முனிவர் ; நளாயினியின் கணவர்.

நாரதர் : ஒரு பெரு முனிவர்.

உலூபி, சித்திராங்கதை, சுபத்திரை : அருச்சுனனின் மனைவியர்.

இராவான் : அருச்சுனனுக்கு உலூபியினிடம் பிறந்த மகன்.

சித்திரவாகன் : பாண்டி மன்னன்.

பப்புருவாகனன் : அருச்சுனனுக்குச் சித்திராங்கதையினிடம் பிறந்த மகன்.

பலராமர் : கண்ணனின் தமையனார்.

அபிமன்யு : அருச்சுனனுக்குச் சுபத்திரையினிடம் பிறந்தவன்.

தட்சகன் : ஒரு பாம்பரசன் ; இந்திரனின் நண்பன்.

அசுவசேனன் : தட்சகனின் மகன் ; காண்டவ வனம் எரிந்த காலத்தில் பிழைத்துக் கன்னனிடம் சென்று பாம்புக்கணையாக இருந்தவன்.

வில்லிபுத்தூராரின்

ஆதி பருவம்

[கதைச் சுருக்கம்]

---

1. குருகுலச் சருக்கம்

“ நீடாழி உலகத்து மறைநாலொ(டு)
ஐந்துஎன்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபார தம்சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்புஆக
வங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும்பி ரானைப்
பணிந்தன்பு கூர்வாமரோ. ”

“ ஆக்கு மாறுஅய னுமுதல் ஆக்கிய உலகம்
காக்கு மாறுசெங் கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்கு மாறுஅர னுமவை வீந்தநாள் மீளப்
பூக்கு மாமுதல் எவன்அவன் பொன்அடி போற்றி.”

[ஆழி - *கடல்*. வாய்மை - *உண்மை*. முனிராசன் - *வேத வியாசர்*. ஆகவம் - *போர்*. பிரான் - *மூத்த பிள்ளையார்*. கூர்வாம் - *மிகுவாம்*. அயன் - *பிரமன்*. கருணையங்கடல் -

---

அருட்கடலாகிய திருமால். **விக்குமாறு** - *அழிக்கும் விதம்.* **அரன்** - *சிவன்.* **விந்த** - *அழிந்த.* **பூக்கும்** - *படைக்கும்.* **அவன்** - *அத்திருமால்.* **போற்றி** - *துதிப்பாம்.*]

பரதன் என்னும் பேரரசனின் குலத்தில் தோன்றியவர்கள் பாரதர் எனப் பெற்றனர். பாரதருடைய வரலாற்றினைக் கூறுங் காரணத்தாலேயே இந்நூல் பாரதம் எனப்பட்டது. அவர்களுடைய குலத்தின் முதல்வன் **சந்திரன்.** சந்திரனது மகன் **புதன்,** புதனது மகன் **புரூரவா,** அவன் ஊர்வசியை மணந்து **ஆயு** என்னும் மகனைப் பெற்றான். ஆயுவின் மகன் **நகுடன்** என்பவனாவான். அவன் யாகங்கள் பலவற்றைச் செய்தவன். எனினும், அவன் அகத்திய முனிவரது சாபத்திற்கு இலக்காகி, மலைப்பாம்பு ஆயினான். நகுடனது மகன் **யயாதி.** யயாதியின் மக்களுள் **பூரு** என்பவன் ஒருவன். தன் தந்தைக்குத் தனது இளமையைக் கொடுத்துப் பெரும்புகழ் பெற்றவன் பூரு. அவனுக்குப் பின் பல தலைமுறைகள் சென்றபிறகு **துஷ்யந்தன்** என்பவன் தோன்றினான். துஷ்யந்தனது மகனே **பரதன்.** பரதனுக்குப் பிறகு அக்குலத்தில் தோன்றிய **அத்தி** என்னும் அரசனது பெயராலேயே அத்தினபுரி அமைந்தது. அக்குலத்தில் பிறந்த **குரு** என்பவனுக்குப் பின் தோன்றியவர்களே **கௌரவர்** என்று அழைக்கப்பெற்றனர்.

இத்தகைய குருவின் மரபில் **சந்தனு** என்பவன் பிறந்தான். இவனுடைய வரலாற்றிலிருந்துதான் வில்லிபுத்தூரார் பாரதக் கதையை விரிவாகக் கூறத் தொடங்குகின்றார். அத்தினபுரியைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செலுத்திவந்த சந்தனு ஒருமுறை வேட்டையாடக் காடு சென்றான். வேட்டை முடிந்த பின் அவன் தனது களைப்பை அகற்றிக்கொள்ளும் பொருட்டுக் கங்கைக் கரையை அடைந்தான். அது காலையில் **கங்காதேவி** அழகியதொரு மானிடப் பெண்ணுருவுடன் ஆற்றங்கரையில் நின்றுகொண்டிருந்தாள். அவளைக் கண்டான் சந்தனு; அவளது அழகில் மயங்கினான். அவள் நிலமகளோ, தெய்வமகளோ என்னும் ஐயம் அவனுக்கு உண்டாயிற்று. அவனுக்கு ஐயம் தோன்றிய பான்மையை வில்லிபுத்தூரார்,

"வையக மடந்தைகொல் வரைம டந்தைகொல்
செய்யபங் கயமலர்த் திரும டந்தைகொல்
துய்யவண் கலைவிதச் சொல்ம டந்தைகொல்
ஐயமுற் றனன்இவள் ஆர்கொல் என்னவே."

[வையகம் - பூமி. வரை - மலை. பங்கயம் - தாமரை. துய்ய - தூய்மையான, வெண்மையான. சொல்மடந்தை - கலைமகள்.]

என்று பாடியுள்ளார். இவ்வாறு ஐயமுற்ற சந்தனு, அவளுடைய கண்கள் இமைத்தலிலிருந்தும், கால்கள் தரையில் தோய்தலிலிருந்தும் அவள் மானிட மகளே

என்று துணிந்தான்; அவளை அணுகினன்; அவளை நோக்கி, 'பெண்ணே! நீயாவள்? உனக்குத் திருமணம் முடிந்துவிட்டதோ? நீ கன்னியாயின் என்னை மணக்க இசைகின்றாயோ? என்னைக் காட்டிலும் சிறந்தவனை நீ பெறுதல் அரிது' என்றான்.

சந்தனுவின் சொற்கள் கங்கை நங்கைக்கு நாணத்தை உண்டாக்கின. எனினும், அவள், 'காவல! யான் கன்னியே. தங்களை மணக்க யான் இசைகின்றேன். ஆயின், தங்களது உள்ளம் நடுங்குமாறு யான் எது செய்தாலும் தாங்கள் அதனைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். மறுத்து மொழிந்தாலும், என்னைத் தடுத்தாலும் யான் தங்களை விடுத்துப் பிரிந்துவிடுவேன். இதற்குத் தாங்கள் இசைந்தால், என் கையில் அடித்து, உறுதி தாருங்கள்' என்றாள். கங்கை நங்கையின்மீது கொண்ட காதல் மயக்கத்தால் சந்தனு, அவளது உரைக்கு உடன்பாடு அளித்தான்; கையிலும் அடித்துக் கொடுத்தான்; தனக்கு உரிய எல்லாவற்றையும் அவளுக்கே அளிப்பதாகக்கூறினான். பின்பு அவ்விருவருக்கும் திருமணம் முடிந்தது.

சந்தனுவும் கங்கையும் சிறிதுகாலம் இன்ப வாழ்க்கை நடத்தினர். அதுகாலையில் கங்கை க வுற்றாள். சந்தனு இன்பக்கடலில் ஆழ்ந்தான். க முதிர்ந்த பின்பு கங்கை அழகியதொரு ஆண்குழந்தை

யைப் பெற்ருள். என்னே வியப்பு! அவள் அக் குழந்தையைப் பலர்க்கு எதிரில் கங்கையாற்றில் எறிந்துவிட்டாள். அவளது செயலைச் சந்தனு பார்த்துக்கொண்டிருந்தான். அவனது உடல் நடுங்கியது. எனினும், அவன் தான் அவளுக்கு அளித்திருந்த உறுதி உரையை உள்ளத்தில் கொண்டு, பேசாமல் இருந்தான். பின்பு அவளுக்கு ஆறு ஆண் குழந்தைகள் பிறந்தன. அவற்றையும் அவள், முதற் குழந்தையைக் கங்கையாற்றில் எறிந்ததுபோலவே எறிந்து விட்டாள். யாது செய்வான் சந்தனு? அவனது உள்ளம் கொதித்தது. எனினும், அவள்மீது கொண்டிருந்த காதலாலும், அவளுக்கு அளித்திருந்த உறுதி உரையாலும் அவன் வாளா இருந்தான்.

பின்பு மீட்டும் கங்கை கருவுற்ருள். நல்லதொரு நாளில் அவள் ஓர் ஆண்குழந்தையைப் பெற்ருள். அதனை உணர்ந்த சந்தனு விரைந்து சென்ருன். தான் அவளுக்குக் கொடுத்திருந்த உறுதி உரையை உதறினுன்; அவள் தரும் இன்பத்தை மறந்தான்; அவளைத் தடுப்பானுய், 'பெண்ணே! உன் செயலை யான் வெறுக்கின்றேன். இரக்கமற்ற அரக்கரைப் போல், உன் குழந்தைகளை நீயே கொன்றுவிட்டாய். இக் குழந்தை எனக்கு வேண்டும். நீ சினம் கொண்டாலும் யான் கவலைப்படப் போவதில்லை. இக்குழந்தையை நீ கங்கையாற்றில் எறிய யான் விடமாட்டேன்' என்ருன்.

அதுகேட்ட கங்கை, 'மன்னவ! நன்று நன்று. தாங்கள் எனக்கு அளித்திருந்த உறுதியுரையை மறந்து இவ்வாறு பேசுகின்றீர்களே!' என்றாள். அதற்குச் சந்தனு, 'பெண்ணே! இத்தகைய கொடுஞ் செயல்களை நீ செய்ததற்குக் காரணம் யாது? குழந்தைகள் நினக்குச் செய்த தீங்கு யாது?' என்றான். கங்கையும் தன் செய்கைக்கு உரிய காரணத்தைக் கூறத் தொடங்கி, அரசனைப் பார்த்து, "அரசே! கேள், சொல்கின்றேன். முன்பு ஒருமுறை யான் பிரம தேவரது சபைக்குச் சென்றிருந்தேன். ஆங்குத் தேவர்கள் யாவரும் வீற்றிருந்தனர். அவர்களை யான் வணங்கினேன். அதுகாலையில் பெருங்காற்று வீசியது. அதனால் எனது ஆடை சற்று விலகியது. ஆடை விலகுதலைக் கண்ட சபையினர் நாணத்தால் கண்ணை மூடிக்கொண்டனர். ஆயின் வருணன் மட்டும், ஆடை விலகியதால் வெளியே தெரிந்த என் இன்ப உறுப்பைக் கண்டு களித்தான். அவனது செய்கை எனக்கும் மகிழ்ச்சியையே தந்தது. எங்களுடைய உள்ளக் கருத்துக்களைப் பிரமதேவர் உணர்ந்துவிட்டார். அவ்வளவில் அவருக்குச் சினம் பொங்கியது. எங்களை மனிதப் பிறவி எடுத்துச் சில ஆண்டுகள் வாழுமாறு சாபம் கொடுத்துவிட்டார். அந்த வருணனின் தோற்றமே நீ. பிரமதேவரது சாபத்தாலேயே யானும் நின்னை மணந்தேன்.

"நிற்க அரசே! குழந்தைகளைக் கொன்றதற்குரிய காரணத்தையும் கூறுகின்றேன். யான் பிரமதேவரது சாபத்தைப் பெற்று மண்ணுலகிற்கு வருங்கால், வசுக்கள் என்னும் தேவர்கள் எண்மரும் எதிர்ப்பட்டனர். என் சாபத்தை உணர்ந்து கொண்டு, அவர்களுள் ஒருவன் என்னை நோக்கி, 'தாயே! எங்கள் எண்மருக்கும் வசிட்டரது சாபம் உள்ளது. நாங்களும் மக்களாகப் பிறக்க வேண்டும். எங்களுள் ஒருவனாகிய பிரபாசன் என்பவன், தன் மனைவியின் சொற்படியே நடந்து வந்தான். அவனது மனைவி வசிட்ட முனிவரிடம் இருந்த காமதேனு என்னும் தெய்வப் பசுவை அடைய விரும்பி, அவனைத் தூண்டினாள். மனைவியின் மனத்தை மகிழச் செய்ய விரும்பிய இந்தப் பிரபாசனும், எங்களைத் தூண்டி விட்டு, அந்தப் பசுவைத் திருடிவர அழைத்தான். நாங்களும் இசைந்து, அவனுக்கு உதவினோம். பசுவும் எங்களால் களவாடப்பட்டுவிட்டது. அதனை உணர்ந்த வசிட்டர் சினந்து, மக்களாகப் பிறக்கும்படி எங்கட்குச் சாபம் கொடுத்துவிட்டார். மனைவியின் சொல்லைக் கேட்டுத் திருட்டுத் தொழில் செய்த இந்த பிரபாசன், பெண் இன்பத்தைத் துறந்து நெடு நாட்கள் பூமியில் வசிக்க வேண்டும் என்பதும், அவனது திருட்டுத் தொழிலுக்கு உதவிசெய்த நாங்கள் எழுவரும், மக்கட் பிறப்பை அடைந்தவுடன் அப்பிறப்பை மாற்றிக்

கொண்டு விடலாம் என்பதும் அவரது சாபம் ஆகும். அன்னையே! யாங்கள் யாது செய்வோம்?' என்றான்.

"வசுக்கள் அடைந்த சாபத்தைக் கேட்ட யான் அவர்களை நோக்கி, 'கவலைத் படாதீர்கள். யான் சந்தனு மன்னனை மணக்கின்றேன். நீங்கள் எட்டுப் பெயர்களும் என் மக்களாகத் தோன்றுங்கள். பிரபாசன் எட்டாவது மகனாகத் தோன்றுவானாக. உங்கள் எழுவரையும், நீங்கள் பிறந்த அளவில் யான் கங்கையாற்றில் எறிந்து, உங்கள் பிறப்பை மாற்றி விடுகின்றேன். எட்டாவது மகனாகத் தோன்றும் இந்தப் பிரபாசன் மட்டும் சந்தனுவுடன் தங்குமாறு செய்கின்றேன்' என்று கூறிவிட்டு இங்கு வந்தேன், நின்னை மணந்தேன். வசுக்களுள் எழுவருக்கும் அளித்த உறுதியுரையின்படியே, பிறந்த அளவில் அவர்களைக் கொன்று, அவர்களுடைய பிறப்பை மாற்றி விட்டேன். எட்டாவது மகன் தங்களுடன் தங்குவான்" என்று விரிவாகத் தன் வரலாற்றைக் கூறினாள்.

கங்கையின் வரலாற்றையும், தன் வரலாற்றையும் விளங்க உணர்ந்த சந்தனு, அவளைப் பார்த்து, 'நங்காய்! பிழைத்திருக்கும் இம்மகன் எத்தகைய வாழ்க்கையை நடத்துவான்?' என்று வினவினான். அதற்குக் கங்கை, 'இம்மகன் இவ்வுலகில் ஒப்புயர்

வற்று விளங்குவான். ஆயின் இவன் பெண்ணின்பம் இன்றியே காலம் கழிப்பான். இவனை யான் என்னுடன் அழைத்துச் செல்வேன்; இவனை வளர்த்து உரிய காலத்தில் தங்களிடம் சேர்ப்பேன்' என்றாள். பின்னும் சிறிது காலம் தன்னுடன் வாழுமாறு சந்தனு கங்கையை வேண்டினன். கங்கையோ அதற்கு இசையாது, சந்தனுவை வணங்கித் தன் மகனுடன் மறைந்து விட்டாள்.

அன்பு மனைவியும் அருமை மகனும் பிரிந்தமைக்குச் சந்தனு பெரிதும் வருந்தினன். அவர்களை என்றேனும் ஒரு நாள் காணலாம் என்னும் நினைவுடன் அவன் நாள்தோறும் கங்கைக் கரையிலேயே உலவி வரலானன். ஆண்டுகள் பல சென்றன. ஒரு நாள் மிக ஏக்கத்துடன் சந்தனு கங்கைக் கரையில் நின்று கொண்டிருந்தான். அப்பொழுது, கண்டோர் முருகனே என்று கூறத்தக்க இளமையும், அழகும், வீரமும் ஆண்மையும் மிக்க காளையொருவன் வளைத்த வில்லுடன் சந்தனுவுக்கு எதிரில் வந்தான். அவனே சந்தனுவின் மகனவான். ஆயின் சந்தனுவோ அம் மகனை தம்முடைய உறவு முறையை அறிந்திலர். வந்த மகன் விளையாட்டாக அம்பு ஒன்றைச் சந்தனுவின் மீது விடுத்து மறைந்து விட்டான். அம்பு பாயப் பெற்ற சந்தனு மயங்கி மண் மீது விழுந்தான்.

அந்நிகழ்ச்சியைக் கண்டுவிட்டாள் கங்கை நங்கை. அவள் விரைந்து மகனுடன் ஆங்குவந்தாள்; மணாளனின் மயக்கத்தை மாற்றினாள்; தந்தையையும் தனயனையும் அறிமுகப்படுத்தி வைத்தாள்; பின்பு சந்தனுவை நோக்கி, 'அன்பரே! தங்களது அருந்தவப் புதல்வனை ஏற்றுக்கொள்ளுங்கள். இவன் **தேவவிரதன்** என்னும் பெயரினன்; வசிட்டரின் அருளால் கல்விக் கடலைத் தாண்டிவிட்டான்; பரசுராமரது அருளால் படைக்கலப் பயிற்சியை நன்கு பெற்றிருக்கிறான் தங்களது மகனைத் தங்களிடம் ஒப்படைத்து விட்டேன்' என்று சொல்லி மறைந்துவிட்டாள். அருந்தவப் புதல்வனைப் பெற்ற சந்தனு, மனைவியின் மறைவினால் உண்டான வருத்தத்தை மறந்து, பெருமகிழ்ச்சியோடு தனது அரண்மனையை அடைந்தான். அவனுடைய நகரமக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

பின்பு ஒருநாள் சந்தனு காட்டில் வேட்டையாடுதற்குச் சென்றிருந்தான். வேட்டை முடிந்து அவன் காளிந்தியாற்றின் கரையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தபொழுது, ஆங்குத் தெய்வ நறுமணம் ஒன்று வீசியது. அம்மணம் சந்தனுவின் மனத்தைக் கவர்ந்தது. அவ்வளவில் அவன் அம்மணம் எங்கிருந்து வருகின்றது என்று அறிய விரும்பிச் சென்றான். ஆ! அம்மணம் அழகியதொரு பெண்ணினிடமிருந்து

வந்தது. அவளைக் கண்ட சந்தனு, காதல் மிகக் கொண்டவனாய், 'பெண்ணே! நீ யாவள்? உன் பெயர் யாது?' என்று வினவினான். நாணத்தால் தலையைக் கவிழ்த்தியவாறே அவள், 'அரசே! யான் இக்காளிந்தி யாற்றில் ஓடம் செலுத்தும் பரதவர் தலைவனது மகள். என் பெயர் **பரிமளகந்தி** என்றாள். அவளது அழகில் சந்தனு பெரிதும் மயங்கிவிட்டான் என்று சொல்லவும் வேண்டுமோ?

உடனே சந்தனு பரிமளகந்தியின் தந்தையை அடைந்தான்; அவளைத் தனக்கு மணம் முடித்து வைக்குமாறு தன் தேர்ப்பாகனின் வாயிலாகத் தெரிவித்தான். அதுகேட்ட வலைஞர் தலைவன் மன்னனிடம் வந்து வணங்கி, 'ஐய! பேரரசாகிய தாங்கள் எமது வலைக்குலச் சிறுமியை மணக்க விரும்புதல் எம் குலம் செய்த தவப்பயனேயாகும். எனினும், தங்கட்கு முதல் மனைவியாகிய கங்கையின் வயிற்றிலுதித்த தேவவிரதன் பட்டத்திற்கு உரியவனாக இருக்கின்றான். எமது மகளை நீங்கள் மணந்துகொண்டால், அவளுக்குப் பிறக்கும் மகனுக்குப் பட்டம் கிடைக்க வழியில்லையே! அந்த மகன் பட்டமின்றி எங்ஙனம் பெருமையுடன் வாழ்வான். இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, ஆவன செய்யுங்கள். எமது மகள் வயிற்றில் உதிக்கும் மகனுக்குப் பட்டம் கிடைப்பதாயின் இத்திருமணத்திற்கு யான் இசைகின்றேன்' என்று

கூறினன். யாது செய்வான் சந்தனு? பரிமளகந்தியை மணக்கும்பொருட்டு, தேவவிரதனுக்குப் பட்டம் இல்லாமற் செய்வது சரியோ? எனவே, அவன் வாய் பேசாமல் திரும்பிவிட்டான். அவனது உடல் திரும்பி விட்டதே யொழிய, அவனது உள்ளம் பரிமளகந்தியினிடமே தங்கிவிட்டது. அவன் நடைப்பிணம் போலவே தோற்றமளித்தான். நாளடைவில் அவனது உடலும் தளரத் தொடங்கியது. உள்ளத்து நோய் உடலை வாட்டுதலில் வியப்பென்ன?

தந்தையின் நிலையைத் தனயனுகிய தேவவிரதன் கண்டான்; நிகழ்ந்தவற்றை தேர்ப்பாகனின் வாயிலாக உணர்ந்தான். அவன் வாளா இருப்பானே? உடனே விரைந்து சென்ருன். எங்கு? பரிமளகந்தியின் தந்தையினிடம்தான். அவன் வலைஞர் தலைவனைப் பார்த்து, 'பாட்டனே! எனது தாயாகிய தங்கள் திருக்குமரியாரை என் தந்தைக்கு மணம் முடித்துவையுங்கள். அவ்வன்னைக்குப் பிறக்கும் மகனுக்கே யான் பட்டம் சூட்டுகின்றேன். யான் மணமின்றி வாழ்வேன்; பெண்டிர் இன்பத்தைக் கனவிலும் நினைக்க மாட்டேன். கடவுளர் அறிய இஃது உறுதி!' என்று தேவர்களும் அஞ்சுமாறு சபதம் செய்தான். என்னே அவன் மனவன்மை? என்னே அவன்

சூளுரை! அக்கணம் முதல் அவன் வீடுமன் என்று அழைக்கப்பெற்றான்.

வலைஞர் தலைவன் இனி வாளா இருப்பானோ? அவன் தன் மகளை யழைத்துக்கொண்டு வீடுமனுடன் சந்தனுவின் அரண்மனையை அடைந்தான். நிகழ்ந்த வற்றைக் கேட்ட சந்தனுவின் மனநிலை இத்தன் மைத்து என்று கூறவும் முடியுமோ? அவன் வீடுமனை மார்புறத் தழுவினான்; பலவாறு போற்றினான்.

அந்நிலையில் வலைஞர் தலைவன் சந்தனுவை வணங்கி, 'ஐய! பரிமளகந்தி உண்மையில் என் மகள் அல்லள். சேதி மன்னனாகிய வசு என்பவனுக்கு, தெய்வப்பெண் ஒருத்தியின் வாயிலாகப் பிறந்தவள் இவள். இவளைக் கருக்கொண்டிருந்த காலையில் அத்தெய்வமகள் சாப வயத்தால் மீன் உருவுடன் இருந்தாள். அம்மீனை யாங்கள் பிடித்துவிட்டோம். பிறகே அத்தெய்வ மகள் ஓர் ஆண் குழந்தையையும், இவளையும் பெற்றாள். அந்த ஆண் குழந்தையை யான் சேதிமன்னனிடம் சேர்த்துவிட்டேன். இவள் என்னுடன் என் மகளா கவே வாழ்ந்து வருகின்றாள். எனவே, இவள் அரச குலப் பெண்ணேயாவாள். இவள் தங்களுக்கு ஏற் றவள் என்பதை உணர்ந்தருள்க' என்றான். பின்பு ஒரு நன்னாளில் சந்தனு பரிமளகந்தியை மணந்தான்.

வீடுமன் அரசியல் அலுவல்களை மேற்பார்வை யிட்டுவந்தான். சந்தனுவோ தன் இளமனைவியுடன்

இன்பவாழ்க்கையில் ஈடுபட்டிருந்தான். சில ஆண்டுகள் கழிந்தபின் பரிமளகந்தி புதல்வர்கள் இருவரை ஈன்ருள். அவர்கள் **சித்திராங்கதன், விசித்திரவீரியன்** என்னும் பெயர்களைப் பெற்றனர். அவர்கட்கு வீடுமன் ஆசிரியராக இருந்து, பலவகைக் கலைகளையும் கற்பித்தான்.

இந்நிலையில் சந்தனு இம்மண்ணுலக வாழ்வை நீத்துப் பொன்னுலகு அடைந்துவிட்டான். வீடுமன் தான் உரைத்த உறுதியுரையின்படியே சித்திராங்கதனை அரசனுக்கினுன். என்னேபாவம்! சித்திராங்கதன் என்னும் பெயருடைய கந்தருவன் ஒருவனும் அக்காலத்தில் இருந்தான். அவன் தன் பெயருடைய மனிதன் ஒருவன் இருத்தலைப் பொருமல், அரசனுகி அரியணை ஏறிய சித்திராங்கதனைக் கொன்றுவிட்டான். உடனே வீடுமன், இளையவனுகிய விசித்திர வீரியனை அரசனுக்கினுன். எனினும், அவனே முன்னின்று அரசியல் அலுவல்களைச் செவ்வனே நடாத்திவந்தான்.

அக்காலத்தில் காசிநாட்டை ஆண்டுவந்த காவலனுக்குப் பெண்டிர் மூவர் இருந்தனர். அவர்கள் **அம்பிகை, அம்பாலிகை, அம்பை** என்னும் பெயருடையவர்கள். காசிமன்னன் தன் புதல்வியர் தாம் விரும்பும் மணளரைத் தேர்ந்தெடுத்தற்கு உரிய சுயம்வரம் அமைத்தான். சுயம்வரத்திற்கு அரசர்கள் பலர்

வந்திருந்தனர். அக்கன்னியர் மூவரையும் தனது தம்பி யாகிய விசித்திரவீரியனுக்கே மணம் முடித்துவைக்க விரும்பினான் வீடுமன். எனவே, அவன் தன் தம்பியை அழைத்துக்கொண்டு, பெரும்படையுடன் சுயம்வர மண்டபத்தை அடைந்தான்.

வீடுமனைக் கண்ட அரசர்கள் நடுங்கினர். சுயம்வர மண்டபத்திற்குக் கன்னியர் மூவரும் வந்த அளவில் வீடுமன் அம்மூவரையும் தேர்மீது ஏற்றிக்கொண்டு செல்வானாயினன். விசித்திரவீரியனும் உடன் சென்றான். வீடுமனது செயலைக் கண்ட அரசர்கள் யாவரும் ஒன்றுகூடி, அவனுடன் போர் செய்யமுற் பட்டனர். ஆயின் சிறிதுபொழுதில், அவர்கள் யாவரும் வீடுமனுக்கு எதிரில் நிற்கமாட்டாமல் ஓடிவிட்டனர். வீடுமன் தன் தம்பியுடனும், கன்னியர் மூவருடனும் தனது நகரை அடைந்தான்.

கன்னியர் மூவருள் அம்பை என்பவள் சாலுவ நாட்டு மன்னனைக் காதலித்திருந்தாள். எனவே, அவள் தனது நினைவை வீடுமனிடம் வெளிப்படையாகக் கூறினாள். அதுகேட்ட வீடுமன், அவளை அச்சாலுவ மன்னனிடமே செல்லுமாறு அனுப்பிவிட்டான். பின்பு அம்பிகை, அம்பாலிகை ஆகிய இருவரும் விசித்திர வீரியனை மணந்துகொண்டனர்.

அம்பை சாலுவமன்னனை நாடிச் சென்றாள் அன்றோ? சாலுவமன்னனோ, வீடுமனால் கைப்பற்றப் பட்ட அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டான். அவள் யாது செய்வாள்? அவள் வீடும னிடம் திரும்பிவந்து, தனக்குத் திருமணம் முடித்து வைக்குமாறு வேண்டினாள். சாலுவமன்னனைக் காத லித்த அவளுக்கு வேறொருவனை மணம் முடித்து வைக்கமுடியாது என்று வீடுமன் மறுத்துவிட்டான். அந்தோ! அம்பையின் நிலை இரங்கத் தக்கதாக இருந்தது!

பின்பு அம்பை தன் தந்தையை அடைந்து, நிகழ்ந்தவற்றைக் கூறினாள். காசி மன்னனும் வீடும னது மனத்தை மாற்ற முயன்றான். ஆனால், பயன் கிட்டவில்லை. முடிவில் அம்பை வீடுமனது ஆசிரிய ராகிய பரசுராமரை அடைந்தாள்; தன் குறையைக் கூறி, வீடுமனது மனத்தை மாற்றித் தன் மண வினையை முடித்துவைக்குமாறு வேண்டினாள். பரசு ராமர் அம்பையின் நிலைக்கு வருந்தினார்; தம் மாணவன் தமது உரையை மறுக்கமாட்டான் என்று எண்ணி னார்; அவளை அழைத்துக்கொண்டு அத்தினபுரியை அடைந்தார்.

தனது நகர் நோக்கிவந்த பரசுராமரை வீடுமன் வரவேற்றான்; பலவாறு போற்றினான். பரசுராமர்

அம்பையின் நிலையை வீடுமனுக்கு விளக்கி, அவளை மணந்துகொள்ளுமாறு அவனிடம் கூறினர். வீடுமன் யாது செய்வான்? ஆசிரியரது உரையை மறுக்க விரும்பவில்லை யெனினும், அவன் மண்ணும் விண்ணும் அறிய உரைத்த உறுதிமொழியிலிருந்து பிறழலாமோ? வீடுமன் தன் ஆசிரியரை வணங்கி, 'ஐயனே! என் உயிரைக் கேட்டாலும் தருகின்றேன். ஆயின் திருமணத்திற்கு யான் உடன்படேன்' என்று கூறி விட்டான்.

மாணவனது உரை ஆசிரியரது சினத்தைத் தூண்டிவிட்டது. அவர் தம் மாணவனுடன் போர்க்கு எழுந்தார். பரசுராமருக்கும் வீடுமனுக்கும் போர் மூண்டுவிட்டது. ஆசிரியருடைய திருவடிகளைக் கருத்தில் இருத்தியவாறே வீடுமன் போர் செய்தான். பத்து நாட்கள் இருவருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. மாணவனே போரில் வெற்றிபெற்ருன். பரசுராமர் தோற்று ஓடிவிட்டார்.

ஐயகோ! அம்பையின் நிலை இத்தகையது என்று இயம்பமுடியுமா? அந்நிலையில் அவளுக்குச் சீற்றம் பொங்கியது. அவள் காட்டை அடைந்தாள்; கடுந்தவம் புரியலானுள். வீடுமனைக் கொல்லவேண்டும் என்பதே அவளது தவத்தின் நோக்கமாகும். அத்தவத்தின் பயனல் அவள் துருபத மன்னனுகிய யாக

சேனனிடத்தில் **சிகண்டி** என்னும் பெயருடன் தோன்றினள். (ஆண் தன்மைபெற்ற இச்சிகண்டியினுலேயே பிறகு வீடுமர் பாரதப் போரில் இறக்குமாறு நேரிட்டது.)

அம்பிகையையும், அம்பாலிகையையும் மணந்த விசித்திரவீரியன் நெடுநாட்கள் உயிருடன் வாழவில்லை. பெருநோய் வயப்பட்ட அவன், மக்கட்பேறு இன்றியே, இம்மண்ணுலகை விடுத்து நீங்கிவிட்டான். என்னே பரிபவம்! குருகுலம் தழைக்க மக்கள் தோன்றவில்லையே!

2. சம்பவச் சருக்கம்

"அரிய கங்குலின் அன்னைதன் வடிவுகொண்(டு)
அலகையா கியநங்கை
பரிவு பொங்கவந்(து) எடுத்துஅணைத்(து)
பரிந்துடன் பாராட்ட [உவந்து உளம்
உருகு மாமுலைப் பாலுடன் அவள்உயிர்
உண்டு அழும் முருகுஆர்மெய்க்
கரிய கோவலன் செய்யதாள் மலர்கள்என்
கருத்தைவிட்(டு) அகலாவே."

[கங்குல் - இரவு. அலகை-பேய்; பூதனை. பரிவு - அன்பு. கோவலன் - கண்ணன். செய்ய - சிவந்த.]

மண்ணுலக வாழ்வை நீத்த விசித்திர வீரியனுக்கு வீடுமன் இறுதிக்கடன்களைச் செய்வித்தான். குலம்

தழைக்க மக்கட்பேறு இல்லாமற் போனமை வீடும னுக்கும், பரிமளகந்திக்கும் பெருந்துயர் தந்தது. பரிமளகந்தி வீடுமனை அழைத்து, 'மைந்த! இக்குலம் முடிந்துவிடுதல் வேண்டுமோ? தழைக்க வேண்டாமா? ஒருத்தி தன் கணவனுடன் பிறந்தானைக் கூடி மக்களைப் பெற்றுக் குலத்தைத் தழைக்கச் செய்தல் தக்கது. எனவே, நீ விசித்திரவீரியனுடைய மனைவி யரைக் கூடி, மக்களைப் பெறுக. தாயாகிய எனது சொற்படி நடப்பதால் உனது உறுதியுரை பழுது அடையாது' என்றாள். ஆ! எத்துணைக் கொடுஞ் சொல்! விண்ணவரும் வியக்குமாறு விரதம் பூண்ட வீடுமன், சூளுரை தவறுவானோ? தாயின் சொல்லை அவன் கேட்டிலன். அவன் பலவாறு சிந்தித்தான். முடிவில் முனிவர்களின் அருளால் அக்குலத்தில் மக் கட்பேறு அமையுமாறு செய்வதே தக்கது என்று அவன் பரிமளகந்தியினிடம் கூறினான்.

வீடுமனது உரை தக்கதாகவே தோன்றியது. எனவே பரிமளகந்தி வீடுமனைப் பார்த்து, 'மைந்த! யான் கன்னியாக இருந்தகாலையில் பராசரமுனிவரின் அருளால் வியாசர் என்னும் முனிவர் என்பால் தோன் றினர். அவர் தோன்றியபிறகு பராசர் என்னை மீட்டும் கன்னியாக்கிச் சென்றுவிட்டார். அவ்வாறு என்பால் தோன்றிய வியாசரை விருவித்து, விசித்திரவீரியனு

டைய மனைவியர் இருவருக்கும் மக்கள் தோன்றுமாறு செய்யலாம்' என்றாள். வீடுமனும் அதற்கு இசையவே, பரிமளகந்தி வியாசரை நினைத்தாள். நினைத்த அளவில் வியாசர் தோன்றித் தம் அன்னையை வணங்கினார். பரிமளகந்தி, குருகுலம் தழைத்தற்கு வழி செய்யுமாறு வியாசருக்குக் கூறினாள். வியாசரும் விசித்திரவீரியனது மனைவியர் இருவருடன் கூடினார். முனிவரது அருள் கிட்டும்பொழுது அம்பிகை நாணத்தால் கண்ணை இறுக மூடிக்கொண்டிருந்தாளாதலால், அவளிடம் தோன்றிய குழந்தை குருட்டுக் குழந்தையாக இருந்தது. அம்பாலிகையோ முனிவரின் அருள் கிட்டுங்காலத்தில் அச்சம் மிகுதியால் உடல் வெளுக்கப் பெற்றுவிட்டாள். எனவே, அவள்பால் தோன்றிய குழந்தை வெண்ணிறம் பெற்று விளங்கியது. குருட்டுக் குழந்தை **திருதராட்டிரன்** என்று பெயரைப் பெற்றது. வெண்ணிறத்துடன் விளங்கிய குழந்தையோ **பாண்டு** என்னும் பெயரைப் பெற்றது.

குழந்தைகள் இரண்டிற்கும் ஒவ்வொரு குறைபாடு இருத்தலைக் கண்ட பரிமளகந்தி, வியாசரை அழைத்து, மீட்டும் அம்பிகையினிடம் சேர்ந்து எக்குறையும் இல்லாத ஓர் ஆண் குழந்தையைத் தோற்றுவிக்குமாறு கூறினாள். வியாசரும் அதற்கு இசைந்து அம்பிகையினிடம் சென்றார். ஆயின் அம்பிகை மீட்டும் முனிவரது சேர்க்கையை விரும்பிலள். எனவே

தீய பிறத்தல் அதனுன் வரும்

அவள் தன் தோழியருள் ஒருத்தியைத் தனக்குப் பதிலாக முனிவரிடம் அனுப்பிவிட்டாள். முனிவரின் அருளால் அந்தத் தோழியின்பால் நல்லதொரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை **விதுரன்** என்னும் பெயரைப் பெற்றது. வியாசரும் பரிமளகந்தினியிடம் விடைபெற்றுத் தமது இருப்பிடம் சேர்ந்தார்.

பின்பு வீடுமன் தன் குலத்தில் தோன்றிய புதல்வர்கள் மூவருக்கும் பலவகைப் பயிற்சிகளை அளித்தார். விதுரனும் அரசர் குலத்தைச் சேர்ந்தவனாகவே கருதப் பட்டு வந்தான். புதல்வர்கள் மூவரும் பலவகைக் கலைகளைக் கற்று காளைப் பருவத்தை அடைந்தனர். வீடுமன் அங்கிலையில் திருதராட்டிரனை அரசனாகவும், பாண்டுவைப் படைத்தலைவனாகவும், விதுரனை அமைச்சனாகவும் அமைத்தான். வீடுமனே எல்லாவற்றையும் மேற்பார்வையிட்டு வந்தான். சிறிதுகாலம் கடந்தபின் வீடுமன் காந்தாரநாட்டுக் காவலனது மகளாகிய **காந்தாரி** என்பவளைத் திருதராட்டிரனுக்கு மணம் முடித்துவைத்தான்.

பாண்டுவுக்கு மனைவியராக வாய்த்தவர்கள் **குந்தி**யும், **மாத்திரி**யும் ஆவர். பிரதை என்னும் பெயரையும் கொண்ட குந்தி என்பவள் சூரன் என்பவனது மகள் ஆவாள். அவள் இளமைப்பருவத்தில், சாபத்தாலும், சாபமொழி தன்னால் வளரும் தவத்தாலும், கோபத்

தாலும் பெரும்பெயர் படைத்த கொடிய முனிவராகிய துருவாசருக்குப் பணிவிடைகள் செய்தாள். அவற்ருல் மகிழ்ந்த முனிவர் மந்திரம் ஒன்றை அவளுக்குக் கூறி, அம்மந்திரத்தை உரைத்து எந்தத் தேவனை நினைத் தாலும், அத்தேவனின் அருளால் அவளுக்கு மகப் பேறு அமையும் என்று சொல்லிவிட்டுச் சென்ருர்.

கன்னியாக இருந்த காலத்தில் ஒருநாள் இரவு குந்திக்கு முனிவர் மந்திரம் உரைத்த நிகழ்ச்சி நினை வுக்கு வந்தது. அதனைச் சோதித்துப் பார்க்க அவளது உளளம் விரும்பியது. ஆனால் அதனால் விளையும் பயனை அப்பேதை ஆராய்ந்தாள் அல்லள். அவள் முனிவர் கூறிய மந்திரத்தைக் கூறி, செங்கதிர்க் கடவுளை எண்ணினாள். அவ்வளவில் கதிர்க்கடவுள் அவள் முன் தோன்றி, அவளைத் தழுவமுற்பட்டான். குந்தி நடுநடுங்கித் தன் பேதமைக்கு வருந்தினாள். எனினும் கதிர்க்கடவுள் அவளைத் தேற்றி, அவளுடன் இன்பம் துய்த்து, அழகிய ஆண்மகவு ஒன்றினை அவள் பால் தோற்றுவித்து மறைந்தான். கதிரவனின் அரு ளால் அவள் மீட்டும் கன்னிப்பருவத்தை அடைந்தாள். நடந்த நிகழ்ச்சியும் கனவுபோல் அவளுக்குத் தோன்றி யது. ஆயினும் பிறந்த குழந்தையை என் செய்வது? அழகும் ஆற்றலும், உருவும் தோற்றமும் கொண்டு, கவச குண்டலங்களுடன் அக்குழந்தை பிறந்திருந்தது. எனினும், கன்னிப்பெண் எவ்வாறு ஒரு குழந்தையை

வளர்க்கமுடியும்? எனவே, அவள் பலவாறு சிந்தித்து, முடிவில் அக்குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து, கங்கையாற்றில் விடுத்தாள். அப்பெட்டியைத் திருதராட்டிரனது தேர்ப்பாகன் எடுத்தான்; குழந்தையைக் கண்டு மகிழ்ந்தான்; மனைவியினிடம் தந்தான். இருவரும் அக்குழந்தையை நன்கு போற்றி வளர்த்தனர். அவ்வாறு வளர்க்கப்பெற்ற குழந்தையே **கன்னன்.** அவன் பரசுராமரிடத்தில் படைக்கலப் பயிற்சிகளை நன்கு பெற்றான்.

இத்தகைய குந்தியைப் பாண்டு முதற்கண் மணந்து, பின்பு மாத்திரியை மணந்து, அவ்விருவருடன் இன்பமாகக் காலம் கழித்துவந்தான், அவ்வாறு இன்பமாக வாழும் நாட்களுள் ஒருநாள் பாண்டு தன் மனைவியருடனும், பரிவாரத்தினரோடும் வேட்டையாடக் காட்டிற்குச் சென்றான். காட்டில் வேட்டை முடிந்தபின் அவன் யாவருடனும் ஓரிடத்தில் அமர்ந்து ஒய்வு எடுத்துக்கொண்டான். அப்பொழுது ஆங்கு ஆண்மான் ஒன்றும், பெண்மான் ஒன்றும் இன்பம் நுகர்ந்துகொண்டிருந்தன. அக்காட்சியைக் கண்ட பாண்டு, சற்றும் ஆய்ந்தோய்ந்து பாராமல், அம்பு ஒன்றை ஆண்மானின்மீது எய்தான். ஐயகோ! அந்த ஆண் மானின் உருவில் இருந்தவர் இந்தமன் என்னும் முனிவர் ஆவார். அம்பு தைக்கப்பெற்ற அவர் தமது உண்மை உருவைக் கொண்டு, பெருஞ்சினத்துடன்

பாண்டுவைப் பார்த்து, 'இன்பம் நுகருங்கால் என் மீது நீ அம்பினை எய்துவிட்டாய். அதனால் யான் இறக்கப் போகின்றேன். இத்தகைய தீவினையைச் செய்த நீயும், பெண்டிருடன் இனி இன்பம் துய்க்கத் தொடங்கிய அளவில் இறப்பாயாக' என்று சாபம் கொடுத்துவிட்டு, இறந்து வீழ்ந்தார். பெண்மானின் உருவில் இருந்த அவரது மனைவியும் தீயில் பாய்ந்து இறந்தாள்.

பாண்டு யாது செய்வான்? தனது தீவினையை நொந்தவாறு அவன் காட்டிலேயே வாழ்ந்து தவம் செய்யலானான். மனைவியர் அவனருகே இருந்தனர். எனினும் என்? அவன் அவர்களைத் தீண்டினானல்லன். இவ்வாறு தவத்தில் ஈடுபட்டிருந்தாலும், தனது குலம் தழைக்கத் தனக்கு மக்கட்பேறு அமையவில்லையே என்று அவனது மனம் ஏங்கியது. கடவுளின் அருளால் எப்படியாவது மக்களைப் பெற்று அளிக்குமாறு அவன் குந்தியை வற்புறுத்தினான். குந்தியும் தனக்குத் துருவாச முனிவர் கன்னிப்பருவத்தே மந்திரம் அருளிய நிகழ்ச்சியைக் கூறினாள். அதுகேட்ட பாண்டு மனம் மிக மகிழ்ந்து, அம்மந்திரத்தின் உதவியால் ஆண் குழந்தையைப் பெறுமாறு கூறினான்.

கணவனது உரைக்கு இசைந்த குந்தியும் துருவாசர் அருளிய மந்திரத்தைக் கூறி, அறக்கடவுளாகிய

தருமராசனை மனத்தில் நினைத்தாள். தருமராசனது அருளால் அவளுக்கு மிக மிக நல்லதொரு நாளில், மண்ணவரும் விண்ணவரும் போற்றுமாறு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அக்குழந்தை **தருமபுத்திரன்** என்று பெயர் பெற்று விளங்கியது.

குந்தியின் வயிற்றில் தருமன் பிறந்தகாலையில் காந்தாரி கருவுற்றிருநதாள். எனினும், அவளது கரு முதிராமலேயே இருந்தது. குநதிக்குக் கடவுளின் அருளால் சீரும் சிறப்பும் வாய்ந்த ஆண் குழந்தை பிறந்த செய்தி, அவளுக்குப் பொறுமைத் தீயை மூட்டியது. அவள் பொறுமையால் அறிவழிந்து, கல் ஒன்றினுல் தன் கருப்பம் சிதையுமாறு மோதினுள். அதனுல் கருவும் சிதைந்தது. கருப்பை சிதறி இரத்தம் பொங்கிப் பரந்தது. அந்நிகழ்ச்சியை அறிந்த பரிமள கந்தி வியாசரை நினைந்து வருவித்தாள். வியாசர் அந்தக் கருப்பைத் துணுக்குகளையும், உதிரத்தையும் நூறு தாழிகளில் நிறைத்து ஆண் உருவங்களைப் பெறுமாறும், எஞ்சியதைத் தனியாக ஒரு தாழியில் நிறைத்து, அதுமட்டும் பெண்ணுருவம் பெறுமாறும் அருள் செய்து சென்றுவிட்டார். அவ்வாறு அமைக்கப் பெற்ற தாழிகளிலிருந்து நூறு ஆண்குழந்தைகள் ஒவ்வொன்ருகத் தோன்றின. முடிவில் தனிப்பட்ட தாழியிலிருந்து பெண்குழநதை ஒன்று தோன்றியது. நூறு ஆண்குழந்தைகளுள் முதலில் தோன்றிய

குழந்தையே **துரியோதனன்.** ஏனைக் குழந்தைகள் **துச்சாதனன்** முதலிய பெயர்களைப் பெற்றன. பெண் குழந்தை **துச்சளை** என்னும் பெயரைப் பெற்றது. இக்குழந்தைகள் தோன்றிய காலத்தில் தீயசகுனங்கள் பல உண்டாயின.

காந்தாரிக்கு நூறு புதல்வர்கள் பிறத்தற்கு உரிய வழியினை வியாசர் செய்யுங்கால் பாண்டு மற்றொரு மகனைக் கடவுளின் அருளால் பெற்று அளிக்குமாறு குந்தியினிடம் கூறினான். குந்தியும் வாயுதேவனை நினைத்து, மந்திரத்தைக் கூறி, அவனது அருளால் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றாள். அக்குழந்தையே **வீமன்.** அவன் பிறந்த காலையில் நல்ல சகுனங்கள் பல உண்டாயின. துரியோதனன் பிறந்த நாளுக்கு மறுநாள்தான் வீமன் பிறந்தான்.

துரியோதனன் முதலிய புதல்வர்கள் நூற்றுவருடனும், துச்சளை என்னும் மகளுடனும் காந்தாரி பொலிவுதலைக் கண்ட பாண்டு, மற்றொரு புதல்வரைப் பெற்றளிக்குமாறு குந்தியினிடம் கூறினான். குந்தியும் இந்திரனை எண்ணி, மறைமொழி கூறி, அவனுடன் கலந்து, தேவர்கள் மலர்மாரி பொழிய அழகும் ஆண்மையும், எழிலும் ஏற்றமும் அமைந்த ஆண்குழந்தை ஒன்றை ஈன்றாள். அக்குழந்தையே **அருச்சுனன்.** பின்பு குந்தி தான் அறிந்திருந்த மந்திரத்தை மாத்தி

ரிக்கும் கூறியருளினுள். அவளும் அசுவினி தேவர்கள் இருவரையும் கருத்தில் இருத்தி, மறைமொழியைக் கூறி, அவர்களுடைய அருளால் **நகுலன், சகாதேவன்** என்னும் புதல்வர்கள் இருவரைப் பெற்ருள். தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவரும் **பாண்டவர்கள்** என்று அழைக்கப்பெற்றனர். துரியோதனன் முதலிய நூற்றுவரும் **கௌரவர்கள்** என்று அழைக்கப்பெற்றனர்.

இவ்வாறு இருக்குங்கால், வசந்த காலத்தில் ஒரு நாள் பாண்டு தன் விணை வசத்தால் தனக்கு இருந்த சாபத்தை மறந்தான்; மாத்திரியுடன் இன்பம் துய்க்கலானுன். அவ்வளவில் முனிவரது சாபத்தால் அவன் உயிர் நீத்தான். மாத்திரியும் அவனுடன் ஈமத்தீயில் புகுந்து இறந்தாள்.

பின்பு வீடுமர் யாவரையும் அத்திபுரிக்கு வருவித்தார். எல்லோரையும் ஒன்று சேர்த்து, ஒற்றுமையுடன் வாழச் செய்தார். எனினும் என்? துரியோதனன் முதலியோர் வஞ்ச நெஞ்சினராய் இருந்தனர். உடல் வலிமையில் சிறந்து விளங்கிய வீமனிடம் துரியோதனன் வெறுப்புக்கொண்டிருந்தான்.

3. வாரணுவதச் சருக்கம்

"அருமறை முதல்வனை ஆழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமகள் தலைவனைத் தேவ தேவனை
இருபத முளரிகள் இறைஞ்சி ஏத்துவாம்."

[மறை - வேதம். ஆழி - சக்கரம். முகில் - மேகம். வண்ணன் - நிறத்தினை உடையவன். கமலம் - தாமரை. கண்ணன் - கண்ணினை உடையவன். கேள்வன் - கணவன். பதம் - திருவடி. முளரி - தாமரை. இறைஞ்சி - வணங்கி. ஏத்துவாம் - துதிப்போம்.]

இளமையிலே துரியோதனன் நஞ்சம் அனைய வஞ்சனை வாய்ந்தவனாக இருந்தான். வீமனுடைய வீரமும், ஆண்மையும் அவனுக்குப் பொறாமையை உண்டாக்கின. நாளடைவில் அப்பொறாமை பெரும் பகையாக மாறிவிட்டது. எனவே, துரியோதனன் எங்ஙனமேனும் வீமனைக் கொன்றுவிட வழிதேடினான். அவனுக்கு அதுகாலையில் கன்னன் பெருநண்பனாக அமைந்திருந்தான். மேலும் மாமனாகிய சகுனியும் துரியோதனனுக்கு உற்ற துணைவனாக இருந்தான். துரியோதனன் கன்னனுடனும், சகுனியுடனும் சேர்ந்து, வீமனைக் கொன்றுவிடுதற்குரிய வழிவகை

களை ஆராய்ந்தான். துச்சாதனனும் தனது அண்ண னுடைய கொடுஞ் செயலுக்கு உதவிசெய்தான்.

துரியோதனன், துச்சாதனன், சகுனி, கன்னன் ஆகிய வஞ்சகர்கள் நால்வரும் ஒருநாள் வீமன் உறங் கும் இடத்தை அடைந்தனர்; உறங்கிக்கொண்டிருந்த வீமனைக் கட்டிலுடன் இறுகக் கட்டினர்; தூக்கிச் சென்று ஆற்றில் விடுத்துமீண்டனர். ஆயின் வீமனோ மிக எளிதில் கட்டுகளை அறுத்துக்கொண்டு, நீந்திக் கரையேறி அரண்மனையை அடைந்துவிட்டான். மற் ெருருமுறை அவ்வஞ்சகர்கள் நால்வரும் நச்சுப் பாம்பு களை வீமன்மீது விடுத்துக் கடிக்கச் செய்தனர். வீமனோ அவற்றை யெல்லாம் கணப்பொழுதில் கொன்றுவிட்டான்.

ஒருமுறை துரியோதனன் ஆற்றில் நீர்மட்டத் திற்கு அடியில் மறைவாகக் கழுமரங்கள் பலவற்றை நாட்டிவைத்தான். பிறகு அவன் வீமனை அழைத்து வந்து, கழுமரங்கள் மறைவாக நாட்டப்பெற்றிருந்த இடத்தில் குதிக்குமாறு தூண்டினான். வீமனைக் காக்க எண்ணிய கண்ணன், வண்டுகளின் உருவம் கொண்டு, வெளிப்புறம் சிறிதே நீட்டிக்கொண்டிருந்த கழுமரங்களின் உச்சியில் அமர்ந்திருந்தார். ஓடுகின்ற நீரில் வண்டுகள் எவ்வாறு அமர்தல் இயலும் என்று ஆராயப்புகுந்த வீமன், கழுமரங்கள் மறைவாக

நாட்டப் பெற்றிருத்தலை உணர்ந்து அவ்விடத்தே குதித்தலைத் தவிர்த்தான். இவ்வாறு கண்ணனின் அருளால் வீமன் பிழைத்தான்.

பின்னர் ஒருமுறை துரியோதனன் வீமனுக்கு விருந்து ஒன்றுவைத்தான். துரியோதனனது வஞ்ச நெஞ்சினை ஒருவாறு உணர்ந்தவனாயினும், பண்பாடு மிக்கவனாதலால் வீமன் துரியோதனனுடன் விருந் துண்ண இசைந்தான். ஆயின் துரியோதனன் நஞ்சு கலந்த உணவுகளை வீமன் உண்ணுமாறு செய்தான். அதனால் வீமன் மயங்கி விழுந்துவிட்டான். அவ்வள வில் துரியோதனன் வீமனைக் கட்டிக் கங்கையாற்றில் எறியச் செய்தான். கங்கையில் எறியப்பெற்ற வீமன், அவ்வாற்றின் கீழேயுள்ள நாகர் உலகத்திற்கு நீரினால் இழுத்துச் செல்லப்பட்டான். ஆங்கிருந்த பாம்புகள் வீமனைக் கடித்தன. நஞ்சினை உண்டு மயங்கியிருந்த வீமனைப் பாம்புகள் கடித்த அளவில், அவனது உடலில் தங்கியிருந்த நச்சுத்தன்மை நீங்கிவிட்டது. நஞ்சுண்டவனது உடலில் பாம்பின் நஞ்சு சேர்ந்தால் அவன் பிழைத்துவிடுவான். இவ்வாறாக வீமன் நஞ்சி னால் உண்டாயிருந்த மயக்கம் நீங்கப்பெற்றான். உடனே அவன் தன்னைப் பிணித்திருந்த கட்டுக்களை அறுத்து எழுந்தான்.

வீமனது வருகையை உணர்ந்த நாகர்களின் தலைவனுகிய வாசுகி என்னும் பாம்பரசன் அவனை வரவேற்ருன். வாசுகிக்கு வாயுதேவன் நண்பனுவான். தன் நண்பனின் மகனுகிய வீமனை வாசுகி வரவேற்றதில் வியப்பென்ன? வாசுகி வீமனைப் பலவாறு உபசரித்து, அவனுக்கு அமிழ்து கொடுத்தான். அந்த அமிழ்தத்தை உண்டமையால் வீமன் அழகும் ஒளியும், ஆற்றலும் உரமும் மிகுதியாகப் பெற்ருன். எட்டு நாட்கள் வீமன் ஆங்குத் தங்கினுன். பின்பு வாசுகி வீமனை விமானத்தில் ஏற்றிக் கங்கைக் கரையில் சேர்ப்பித்தான். வீமனும் தன் உடன்பிறந்தவர்கள் இருந்த இடத்தைச் சேர்ந்தான். அவனைக் கண்ட தருமன் முதலியோர் பெருமகிழ்ச்சி யடைந்தனர். வீமன் இறந்துபட்டான் என்று எண்ணி மகிழ்ந்திருந்த துரியோதனன் அடைந்த துன்பத்திற்கு எல்லையேயில்லை.

கௌரவர் நூற்றுவர்க்கும், பாண்டவர் ஐவர்க்கும் வீடுமர் படைக்கலப் பயிற்சி அளிக்க விரும்பினுர். அவர் முதற்கண் கிருபாச்சாரியார் என்பவரை அவர்கட்கு வில்லாசிரியராக அமைத்தார். அவர் தமக்குத் தெரிந்த விற்கலையை இளைஞர்கட்குக் கற்பித்துவிட்டார். அவரினும் சிறந்த வேருெரு வில்லாசிரியரை அவர்கட்கு அமைக்க விரும்பினுர் வீடுமர். அக்காலத்தில் பரத்துவாச முனிவரது மைந்தராகிய துரோணர்

என்பவர் வில்வித்தையைக் கற்பிப்பதில் பெரும் பேராசிரியராகத் திகழ்ந்து வந்தார். அதனை உணர்ந்த வீடுமர் துரோணரை வருவித்து, துரியோதனன் முதலானவர்கட்கும், தருமன் முதலியோர்க்கும் வில்லாசிரியராக இருக்கும்படி வேண்டினர்.

வீடுமரது வேண்டுகோளுக்கு இணங்கிய துரோணர், வீடுமரைப் பார்த்து, "ஐய! தங்களது விருப்பப்படியே இவ்விளைஞர்கட்கு யான் நல்லமுறையில் விற்பயிற்சி அளிக்கின்றேன். எனினும், யான் ஒரு சபதம் செய்துள்ளேன். அதை யான் எங்ஙனமேனும் நிறைவேற்றவேண்டும். அச்சபதத்தைப் பற்றிய விளக்கத்தையும் கூறுகின்றேன், கேளுங்கள்.

"யான் அங்கிவேசர் என்பவரிடத்தில் கல்விகற்று வந்தேன். அதுகாலையில் துருபத மன்னனாகிய யாக **சேனன்** என்பவன் என்னுடன் பயின்றான். நாங்கள் இருவரும் பெருநண்பர்களாக விளங்கினோம். ஒருநாள் யாகசேனன் என்னைப் பார்த்து, 'நண்ப! யான் எனக்குரிய அரசியலைப் பெற்றவுடன், எனது நாட்டில் அரைப்பகுதியை உனக்குத் தருகின்றேன். இஃது உறுதி' என்றான். பின்பு சில ஆண்டுகளில் யாகசேனன் தனக்குரிய அரசியலைப் பெற்றான். யானும் கிருபாச்சாரியாரது தங்கையை மணந்தேன்; பின்பு **அசுவத்தாமன்** என்னும் வீரமைந்தனைப் பெற்றேன்.

அதுகாலையில் வறுமை எங்களை வாட்டியது. அந்நிலையில் யான் எனது இளம்பருவத் தோழனாகிய யாகசேனனைக் கண்டு, என் வறுமை நிலையை அகற்றிக் கொள்ள விரும்பினேன்.

"எனவே, யான் யாகசேனனைச் சென்று கண்டேன்; எங்களுடைய இளம்பருவ நட்பைக் கூறினேன்; தனது நாட்டில் பாதியைத் தருவதாக அவன் அளித்திருந்த உறுதியுரையையும் குறிப்பிட்டேன். ஐயகோ! என்னே புதுமை! என்னே கொடுமை! என்னைப் பார்த்ததே இல்லை என்றும், யான் யாவன் என்றே தனக்குத் தெரியாது என்றும் அந்த யாகசேனன் கூறி விட்டான். அவ்வளவில் எனக்குச் சினம் பொங்கியது. ஆகவே யான், 'யாகசேனா! உனது உயிர் நன்பன் யான் என்பதை நீ மறந்து விட்டாய். நீ எனக்கு அளித்திருந்த உறுதியுரையையும் மறந்து விட்டாய். செல்வச் செருக்கு உனது மதியினை மயக்கி விட்டது. உனக்கு யான் நல்லதொரு பாடம் கற்பிப்பேன்; உன்னைப் போரில் சிறைப்படுத்துவேன்; உனது நாட்டில் பாதியையும் கைப்பற்றுவேன். ஈது உறுதி' என்று சபதம் செய்து வந்து விட்டேன். அந்த சபதத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே என் வாழ்க்கையின் குறிக்கோள். அது நிறைவேறுதற்குரிய வழிவகைகளை யான் செய்தல்

வேண்டும். என் சபதம் நிறைவேறுமோ ?” என்று கூறினர்.

துரோணரது உரையைக் கேட்ட வீடுமர், அவரை நோக்கி, 'நல்லாசிரியரே ! தாங்கள் கௌர வர்கட்கும், பாண்டவர்கட்கும் விற்பயற்சி அளித்து, அவர்களைக் கொண்டே தங்களது சபதத்தை நிறை வேற்றிக் கொள்ளுங்கள்' என்ருர். துரோணருக்கும் அதுவே ஏற்ற வழி என்று தோன்றியது. எனவே, அவர் அன்று முதல் குருகுலத்து இளைஞர்கட்கு வில்லாசிரியராக அமர்ந்தார்.

இளைஞர்கள் யாவரும் துரோணரிடத்தில் விற் பயிற்சி பெற்றனர். துரோணர் யாவருக்கும் ஒரேவித மாகத்தான் பயிற்சியளித்தார். எனினும், பாண்டவர் களுள் ஒருவனுகிய அருச்சுனன் விற்பயிற்சியில் சிறந்த வனுக விளங்கினுன். வில்லில் வல்ல இராமனைப் போலவே அருச்சுனனும் வில்லில் ஒப்புயர்வற்று விளங்கினுன். அவனது வீரத்திற்கு முன் துரியோ தனன் முதலியவர்களது ஆண்மை சூரியனுக்கு எதிரில் மின்மினிபோல் ஒளி மழுங்கித் தோன்றியது. அருச் சுனனது வீரத்தைக் கண்ட துரோணர் அவனிடம் தனிமதிப்பும் அன்பும் வைத்திருந்தார். இந் நிகழ்ச்சியை ஆசிரியர் வில்லிபுத்தூரார்,

"வெஞ்சிலையி னல்இவன் இராகவனை ஒக்கும்என
விசயன்விச யத்தின்மிகவே
எஞ்சிய குமாரர்கள் பொருமையின் மிகுத்தனர்கள்
இரவிஎதிர் மின்மினிகள்போல்
அம்சொல்முனி தானும்இவன் மேல்எவரி னும்பெருக
அன்புடைய னகி அகலான்
நெஞ்சுஉற அருங்கலைகள் கற்குமவர் தம்மளவில்
நேயம்மிக ஓதவர்கள் யார்?"

[இராகவன் - இராமன். விசயன்-அருச்சுனன். விசயம்-வெற்றி. இரவி - சூரியன். நேயம் - அன்பு.]

என்று பாடியுள்ளார்.

அக்காலத்தில் **ஏகலைவன்** என்னும் பெயர் வாய்ந்த வேடுவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் துரோணரிடம் வந்து, தனக்கு வில்வித்தையைக் கற்பிக்குமாறு வேண்டினன். துரோணரோ அவனுக்கு விற்பயிற்சி அளிக்க இசைந்திலர். ஆயின் அவன் அதுபற்றிக் கவலை கொண்டானல்லன். அவன் தன் இருப்பிடத்தை அடைந்தான்; துரோணரைப் போல்வதோர் உருவத்தை அமைத்து நிறுத்தினன்; அவ்வுருவத்தையே தன் ஆசிரியராகக் கருதினன்; அவ்வுருவத்தின் முன் நாள்தோறும் நின்று வழிபட்டு விற்பயிற்சி செய்து வந்தான். அதனல் அவனுக்கு நாளடைவில் அருச்சுனனைப் போன்ற திறமை

அமைந்துவிட்டது. அது காலையில் ஒரு நாள் துரோணர் அவனது இருப்பிடத்தை அடைந்தார்; அவனது வில்லின் திறமையை உணர்ந்தார். அருச்சுன னுக்கு இணையான திறமை வேடுவன் ஒருவனிடம் இருத்தலை அவர் விரும்பவில்லை. ஏகலைவனே துரோணரைத் தனது ஆசிரியராகக் கருதி வணங்கி ஞன். அந்நிலையில் துரோணர், அவனது வலக்கைப் பெருவிரலைக் குருவின் காணிக்கையாகத் தனக்கு அளிக்குமாறு அவனிடம் கேட்டார். உண்மை ஆசிரிய அன்பு அமைந்த ஏகலைவன் உடனே தனது வலக்கைப் பெருவிரலை நறுக்கி, ஆசிரியரது காணிக்கையாக அவ ருடைய திருவடிகளில் வைத்து வணங்கினன். என்னே அவனது குரு பக்தி! துரோணரும் ஏகலை வனது பக்தியைப் புகழ்ந்து போற்றிச் சென்ருர். அருச்சுனனிடத்தில் துரோணர் கொண்டிருந்த கரை கடந்த அன்பிற்கு இஃது ஒரு சான்று அன்றே?

துரோணர் அருச்சுனன் மீது அளவற்ற அன்பு கொண்டிருத்தலையும், அருச்சுனன் வீரம் மிக்கு விளங்கு தலையும் கண்ட துரியோதனன் முதலியோர் பொருமை கொண்டனர். அந்நிலையை உணர்ந்த துரோணர் அருச்சுனனது உண்மை வீரத்தை ஏனையோர்க்கு எடுத்துக் காட்ட விரும்பினர். எனவே, அவர் ஒரு நாள்வேண்டுமென்றே தமது கையில் அணிந்திருந்த

கணையாழியைக் கிணறு ஒன்றில் வீழ்த்திவிட்டு, அதனை அம்பு எய்து எடுத்துத் தருமாறு தம் மாணவர்களிடம் கூறினார். அருச்சுனனைத் தவிர ஏனையோர் முயன்றனர். அவர்களால் அக்கணையாழியை எடுத்துத் தர இயலவில்லை. பின்பு கணப்பொழுதில் கணை யெய்து அருச்சுனன் அதனை எடுத்துத் தந்தான். அவ்வாறே ஒரு மரத்தில் இருந்த எல்லா இலைகளையும் தொளைக்குமாறு ஒரே அம்பினை எய்து அருச்சுனன் தனது வில்லாற்றலை வெளிப்படுத்தினான். அவ்வாறு செய்தற்கு ஏனையோரால் இயலவில்லை.

ஒருமுறை துரோணர் நீராடுங்கால், முதலை ஒன்று அவரது காலைக் கௌவிக் கொண்டது. அதனை உணர்ந்த மாணவர்கள் அம்பெய்து, அந்த முதலையின் பிடியிலிருந்து ஆசிரியரை விடுவிக்க முயன்றனர். அருச்சுனனைத் தவிர ஏனையோர் முயற்சி தோல்வியையே தந்தது. ஆனால் அருச்சுனன் ஒரே கணையினால் முதலையைக் கொன்று ஆசிரியரைக் காப்பாற்றினான். இத்தகைய நிகழ்ச்சிகளால் அருச்சுனனது ஆற்றல் நன்கு வெளிப்பட்டது. அருச்சுனன் மீது துரோணர் கொண்டிருந்த அன்பும் வளர்ந்து வரலாயிற்று.

குருகுலத்து இளைஞர்கள் யாவரும் ஒருவாறு வில்லாற்றல் பெற்றனர். அவர்கள் தங்களுடைய திறமைகளைக் காட்டுவதற்கு ஒரு வாய்ப்பை உண்டாக்க

விரும்பிய துரோணர் அரங்கேற்று விழா ஒன்றை அமைத்தார். வீடுமர், விதுரர் முதலியோரும், நகர மக்களும் விழாவிற்கு வந்திருந்தனர். அவ்விழாவில் இளைஞர்கள் ஒவ்வொருவரும் தத்தம் திறமையைத் தனித்தனி காட்டினர். பிறகு துரியோதனனும் வீமனும் போர் செய்து தத்தம் வலிமையைக் காட்டலாயினர். விளையாட்டாகத் தொடங்கிய போர் வினையாக முற்றிவிடும் போல் இருக்கவே, துரோணரது மகனுகிய அசுவத்தாமன் அவ்விருவரையும் விலக்கினுன்.

அரங்கேற்று விழாவின் பிறகு அருச்சுனன் தன் வில்லாண்மையைப் பலவிதங்களில் வெளிப்படுத்திஞன். அவையோர் யாவரும் அவனை ஒருமுகமாகப் புகழ்ந்தனர். அது கண்ட கன்னன் பொருமை கொண்டான்; எழுந்தான் விரைவில்; வளைத்தான் வில்லை; 'அருச்சுனனைக் காட்டிலும் சிறந்த வீரன் கன்னனே' என்று யாவரும் புகழுமாறு தனது வில்லாண்மையைக் காட்டினுன். அது கண்ட துரியோதனன் பெருமகிழ்ச்சி யடைந்தான். அவ்வளவில் கன்னன் அருச்சுனனைத் தன்னுடன் விற்போர் புரிய அழைத்தான். அருச்சுனனும் இசைந்தான். அது காலையில் கிருபாச்சாரியார், 'தேர்ப்பாகனது மகனுகிய கன்னன் அரசகுமாரனுகிய அருச்சுனனுடன் போர்

புரிதல் கூடாது!' என்று கூறி, கன்னன் தாழ்ந்த குலத்தவன் என்று சுட்டிக் காட்டினர்.

கிருபரது உரையைக் கேட்ட துரியோதனனுக்குச் சினம் பொங்கியது. தனது உயிர் நண்பனுகிய கன்னனைக் கிருபர் இழிந்துக் கூறுதலை அவன் பொறுப்பானே? எனவே, அவன் எழுந்து, 'கன்னன் இழிகுலத்தவன் என்று கிருபர் கூறுகின்றார். பிறப்பினுல் உயர்வு தாழ்வு உண்டோ? எனினும், இக்கணமே யான் கன்னனை அங்க நாட்டிற்கு அரசனுக ஆக்கி விட்டேன். இனி அவன் அரசன். எங்களுக்கு உள்ள மதிப்பு இனி அவனுக்கும் உண்டு' என்று கூறி அச்சபையிலேயே அங்க நாட்டின் அரசனுகக் கன்னனுக்கு முடி சூட்டி விட்டான். அரங்கேற்று விழாவும் அதனுடன் முடிந்து விட்டது. ஆனல் அவ்விழாவிலிருந்து கன்னனுக்கும் துரியோதனனுக்கும் இருந்த நட்பும் உறுதியை அடைந்து விட்டது.

அரங்கேற்று விழாவில் தம் மாணவர்களின் ஆண்மையைத் தனித்தனிக் கண்டு மகிழ்ந்த துரோணர், அவர்களைக் கொண்டு தமது சபதத்தை நிறைவேற்றுதற்குரிய காலம் வந்து விட்டது என்று உணர்ந்தார். யாகசேனன் தம்மிடம் இளமையிற் கொண்ட நட்பினையும், பிறகு அவன் அரசனனபின் தம்மிடம் கொண்ட நட்பினை மறந்து தம்மை இகழ்ந்து பேசிய தன்மை

யையும், அவனைத் தேர்க்காலில் கட்டி, அவனது நாட்டில் பாதியைக் கவர்வதாகத் தாம் சபதம் செய்த நிகழ்ச்சியையும், சபதத்தை நிறைவேற்றித் தருவது மாணவர்களுடைய கடமை என்பதையும் அவர் தம் மாணவர்களிடம் விளங்கக் கூறி, அவர்களை யாகசேனனுடன் போர் செய்ய அனுப்பினார். மாணவர்கள் யாவரும் பெரும்படையுடன் யாகசேனனுடன் போர் செய்யச் சென்றனர்.

குருகுல இளைஞர்க்கும் யாகசேனனுக்கும் பெரும் போர் மூண்டது. போரில் துரியோதனன் முதலியோர் தோற்று முதுகு காட்டி ஓடிவந்தனர். அதனைக் கண்டான் அருச்சுனன்; பெருஞ் சினம் கொண்டான்; வில்லை வளைத்தான்; காள மேகம் நீர்த்துளிகள் பொழிதலைப்போல் அம்புகளை ஏவினான். அவற்றால் யாகசேனனது படை பறந்தது. யாகசேனனுடன் அருச்சுனன் தனித்துப் போர் செய்து, அவனைச் சிறைப் பிடித்துத் தன் தேர்க்காலில் கட்டி இழுத்து வந்து, தன் ஆசிரியர் முன்பு நிறுத்தினான். யாகசேனனே நாணித் தலைகுனிந்தான். கட்டுண்டு தம்முன் நின்ற யாகசேனனை நோக்கித் துரோணர், 'யாகசேனா! நீ கூறிய உறுதி உரை பிழைத்தாய். அதன் பயனைப் பார். இப்பொழுது உன் உயிர் என்னிடம் உள்ளது. நீ என் கைதி. உன்னைக்கொன்று, உனது

நாடு முழுவதையும் இப்பொழுது நான் கைப்பற்றிக் கொள்ள முடியும். எனினும், யான் அவ்வாறு செய்ய விரும்பவில்லை. எனது சபதம் நிறைவேறி விட்டது. நீ இளமையிற் கூறியவாறு உனது நாட்டில் பாதியை மட்டிலும் யான் வைத்துக் கொள்கிறேன்; எஞ்சிய பாதியை உனக்கே யான் தருகிறேன்; உன் உயிரையும் உனக்குத் தருகிறேன். பிழைத்துப்போ !' என்று கூறி அவனை விடுவித்தார். அவனும் நாணத்துடன் தனது நாட்டை அடைந்தான்.

தன் நாட்டை அடைந்த யாகசேனனது உள்ளம் கொதித்தது. துரோணரின் மீது அவன் பெருஞ் சீற்றம் கொண்டான். வில் வலிமை காட்டித் தன்னைச் சிறைப்படுத்திய விசயனது வீரம் அவனது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. விசயனைத் தன் மருமகனாகக் கொள்வதற்கு ஒரு மகளும், துரோணரைக் கொல்வதற்கு ஒரு மகனும் பெற அவன் விரும்பினான். அவ்விருப்பம் நிறைவேறுதற் பொருட்டு அவன் முனிவர்களை அழைத்துப் பெருவேள்வி செய்தான். ஒரு மகனும் ஒரு மகளும் பெற வேண்டும் என்று அவன் விரும்பியவாறே வேள்வித் தீயிலிருந்து முதற்கண் ஒரு மகன் தோன்றினான். பிறகு ஒரு மகள் தோன்றினாள். தோன்றிய மகன் திட்டத்துய்மன் என்றும், மகள் திரௌபதி என்றும் பெயர் பெற்றனர்.

துரோணரைக் கொல்வதற்குரிய மகனைப் பெற வேண்டும் என்னும் கருத்துடனன்றோ யாகசேனன் திட்டத்துய்மனை யாகத்தியினின்று பெற்றான்? எனவே, யாகசேனன் திட்டத்துய்மனுக்குப் பலவிதமான போர் பயிற்சிகள் அளிக்கச் செய்தான். அவ்வாறு அளித்தவர் யார்? துரோணரே ஆவார். திட்டத்துய்மனே அவரிடம் சென்று தனக்கு ஆசிரியராக இருக்க வேண்டும் என்று வணங்கிக்கேட்டான். அவனால் தமக்கு இறுதி நேரிடும் என்பதை உணர்ந்திருந்தும், துரோணர் அவனுக்கு ஆசிரியராக இருந்து, படைக் கலப்பயிற்சி அளிக்க இசைந்து, அவ்வாறே அறிவித்தார். ஆ! எத்தகைய பண்பாடு! நல்ல பண்பாட்டிற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ?

இஃது இங்ஙனம் இருக்குங்கால் அத்தினபுரியில் இளைஞர்கள் சீரும் சிறப்பும் பெற்று விளங்கலாயினர். குருகுல இளைஞர்களுள் மூத்தவனாகிய தருமன் ஒழுக்கமும் உயர்வும், அறிவும் ஆண்மையும், வீரமும் ஈரமும் உடையவனாகத் திகழ்ந்தான். அவனது உயர்வைக் கண்ட வீடுமர் முதலியோர் மகிழ்ந்து, அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினர்.

தருமன் இளவரசனான நிகழ்ச்சி துரியோதனனுக்குப்பொறாமையையும், சினத்தையும் உண்டாக்கியது. அவன் திருதராட்டிரனிடம் சென்று, 'தந்தையே!

எனக்குரிய பதவியைத் தருமனுக்கு அளித்து விட்டீர்கள். அரசாளுதற்குரிய தகுதி எனக்கு இல்லையோ? யான் எவ்விதத்தில் தருமனுக்குக் குறைந்தவன்? என் தம்பியரும், மாமனாகிய சகுனியும் வீரத்திற் சிறந்த கன்னனும் உற்ற துணைவர்களாக என்னருகில் உள்ளனர். எனக்கே இளவரசுப் பட்டம் வேண்டும்' என்று பலவற்றைக் கூறி, தன் தந்தையின் மனத்தை மாற்றி விட்டான். திருதராட்டிரன் பிறகு வீடுமரையும், விதுரரையும் அழைத்து, துரியோதனனது கருத்தைக் கூறினான். வீடுமரும் விதுரரும் திருதராட்டிரனுக்கு அறிவுரைகள் பல கூறினர். எனினும், அவன் அவற்றைக் கேட்டானல்லன். இனி அறிவுரை கூறுதலில் பயனில்லை யென்று எண்ணிய வீடுமரும் விதுரரும், திருதராட்டிரனது விருப்பப்படியே யாவும் நடை பெறுமாறு விடுத்துத் தம் இருப்பிடத்தை அடைந்து விட்டனர்.

பின்பு துரியோதனன் தன் தந்தையுடன் கலந்து பாண்டவர்களைத் தொலைத்தற்குரிய வழியை ஆராய்ந்தான். மகனது தீய நினைவுக்குத் தந்தையும் உடன்பட்டமை வியப்பேயாகும். எனினும் என் செய்வது? கெடுமதி கண்ணுக்குத் தோன்றுதன்றோ? தந்தையையும் தனது சதிச் செயலுக்கு உடன்படுமாறு செய்த துரியோதனன், வாரணாவதம் என்னும் இடத்தில் அரக்கினால் பெரியதொரு மாளிகை ஒன்று கட்டுவித்தான்.

அம்மாளிகையில் பாண்டவர்களைத் தங்கச் செய்து, ஒருநாள் அம்மாளிகைக்குத் தீவைத்து, பாண்டவர்கள் ஐவரையும் ஒரு சேரக் கொன்று விடவேண்டும் என்பதே அவனது சதித் திட்டம். வாரணாவதத்தில் அரக்கு மாளிகை கட்டப் பெற்றவுடன், துரியோதனன் மெல்லத் தன் தந்தையை அழைத்து, அரக்கு மாளிகையில் பாண்டவர்கள் தங்குமாறு செய்யும்படி தூண்டினான்.

திருதராட்டிரனும் நல்லுரை கூறுபவனைப் போல் நடித்து, வாரணாவதத்தில் அமைக்கப் பெற்றுள்ள அரக்குமாளிகையில் தங்கி அரசு செலுத்துமாறு தருமனுக்குக் கூறினான். பெரிய தந்தையின் சொல்லை மறுக்க விரும்பாத தருமனும் அவரது கட்டளைக்கு இசைந்தான். பின்பு தருமன் தன் தம்பிமாருடனும், தாயாகிய குந்தியுடனும் வாரணாவதத்தை அடைந்து ஆங்கு எழுப்பப் பெற்றிருந்த அரக்கு மாளிகையில் தங்கி, அரசியலை நடத்திவந்தான். திருதராட்டிரனால் அனுப்பப் பெற்ற புரோசனன் என்னும் வஞ்சநெஞ்சினன் தருமனுக்கு அமைச்சனாக இருந்தான். காலம் பார்த்திருந்து, அரக்கு மாளிகைக்குத் தீவைத்துப் பாண்டவர்களைக் கொல்லும் சதித் திட்டத்தை வெற்றியுடன் நிறைவேற்றுதலே அந்த அமைச்சனுக்கு மறைவில் இடப்பெற்றிருந்த கட்டளையாகும். அவனும்

சதித்திட்டத்தை நிறைவேற்றக் காலம் பார்த்திருந் தான்.

இந் நிலையில் ஒருநாள் தச்சன் ஒருவன் வந்து, வீமனைத் தனிமையில் கண்டான். வீமன் அவன் வந்த செய்தியை வினவ, அவன் வீமனை வணங்கி, 'ஐயா! தாங்கள் தங்கியிருக்கும் இம்மாளிகை அரக்கினால் கட்டப் பெற்றது. திருதராட்டிரன், துரியோதனன் முதலியோர் சதித் திட்டம் வகுத்துள்ளனர். இம் மாளிகைக்கு தீமூட்டித் தங்களையெல்லாம் கொன்று விட வேண்டும் என்பதே அந்தச் சதித்திட்டம் ஆகும். இத்திட்டத்தை விதுரர் முதலிலேயே உணர்ந்து விட்டார். அதனால் அவர் என்னை அனுப்பி, இம் மாளிகை கட்டும் பணியில் என்னையும் ஈடுபடுமாறும், தாங்கள் எல்லோரும் தப்பிப் பிழைப்பதற்கு வழி செய்யுமாறும் கூறினார். யானும் அந்த சதிகாரர்களு டன் கலந்து கொண்டேன். இம்மாளிகையைக் கட்டுங் கால், யாவரும் அறியாதவாறு யான் இதன் கீழ் புறத்தே சுரங்க வழி ஒன்றை அமைத்துள்ளேன். இம் மாளிகையின் நடுவே சூழ்ச்சியுடன் ஒரு தூணை அமைத்துள்ளேன். அத் தூணை ஒரு கணத்தில் தங்க ளால் பெயர்த்துவிட முடியும். தூண் பெயர்ந்தால் சுரங்க வழியில் செல்வதற்குரிய வாயில் புலப்படும். அச் சுரங்கத்தில் நடந்து சென்றால், இந்நகருக்கு

அப்பால் உள்ள காட்டை அடைந்து விடலாம். துன்பம் வந்த காலத்தில் நீங்கள் யாவரும் அவ்வழியே சென்று தப்பி விடுங்கள்' என்றான். வீமனும் அத் தச்சனது நேர்மையைப் புகழ்ந்து, அவனுக்குப் பெரும் பரிசில் அளித்து அனுப்பிவிட்டான்.

தச்சன் சென்ற பிறகு வீமன் ஆராய்ந்து பார்த்தான். துரியோதனன் மீது அடங்காச்சினம் அவனுக்கு உண்டாயிற்று. எனினும், வெளிப்படையாக அப்பொழுதே பகையை ஒழித்தல் சரியன்று என்று அவனுக்குத் தோன்றியது. பகைவர்களும், உலகத்தோரும் தாங்கள் இறந்துபட்டதாக எண்ணியிருத்தல் தக்கது என்று அவன் உணர்ந்தான்; 'புரோசனன் அரக்கு மாளிகைக்குத் தீவைக்குமுன் நாமே தீ வைத்து விடுவோம்; தச்சன் கூறிய சுரங்க வழியில் உடன் பிறந்தவர்களுடனும், தாயுடனும் தப்பி விடுவோம்; புரோசனன் இம்மாளிகையிலேயே இறக்குமாறு செய்து விடுவோம். இச் செய்தியை உடன் பிறந்தவர்கள் உணர்ந்தால் கலங்குவர். எனவே, அவர்கள் அறியாதவாறு இச் செயலை ஒருவனாகவே செய்து முடித்தல் தக்கது' என்று ஆராய்ந்து முடிவுக்கு வந்தான்.

ஒரு நாள் பாண்டவர்கள் வேட்டைக்குச் சென்று இரவு திரும்பினர். அன்று புரோசனனும் பாண்டவர்களுடன் அரக்கு மாளிகையில் தங்கினன். அன்று இரவுதான் பகைவர்கள் தம் சதித் திட்டத்தின்படி அரக்கு மாளிகைக்குத் தீயிடக் குறிப்பிட்டிருந்தனர். அதனை உணர்ந்து கொண்ட வீமன் அன்று இரவு யாவரும் உறங்கும் வரையில் விழித்திருந்தான். உறங்கியவுடன் தீயை வைத்தான்; உறங்கிக் கொண்டிருந்த உடன் பிறந்தவர்களையும், தாயையும் தூக்கிக் கொண்டான்; தச்சன் கூறிய தூணை உதைத்தான்; சுரங்க வழி தெரியவே, அதன்கண் இறங்கிச் சென்று காட்டை அடைந்து விட்டான்.

அரக்கு மாளிகை தீப்பற்றி எரிந்து விட்டது' நாட்டு மக்கள் யாவரும் பாண்டவர்கள் தீயில் அகப்பட்டு வெந்து சாம்பலாயினர் என்று எண்ணி வருந்தினர். பாண்டவர்கள் இறந்தனர் என்று கேள்விப்பட்ட துரியோதனன் முதலியோர் பெரு மகிழ்ச்சி அடைந்தனர். விதுரர் ஒருவர் மட்டுமே பாண்டவர் தப்பிய செய்தியை உணர்ந்தவர். ஏனையோர் பாண்டவர் பொருட்டு வருந்தினர். அவர்களையெல்லாம் விதுரர் தேற்றினர்.

இருபுனலும் வாய்ந்த மலையும்

4. வேத்திரகீயச் சருக்கம்

"சீத நாண்மலர்க் கோயில் மேவுசெந்
 திருவின் நாயகன் தேவ நாயகன்
வேத நாயகன் பூத நாயகன்
 விரத நாயகன் விபுத நாயகன்
போத காதிபன் முதலே வாயிடைப்
 பொறைத ளர்ந்துமுன் பொதுவி லேநினைந்(து)
ஆதி மூலமே என்ன முன்வரும்
 ஆதி நாயகன் அடிவ ணங்குவோம்."

[சீதம் - குளிர்ச்சி. நாண்மலர் - அன்று பூத்த பூ. விபுதர் - தேவர். ஆதி நாயகன் - திருமால்].

உடன் பிறந்தவர்களையும், தாயையும் தூக்கிய வாறு வீமன் விரைந்து நடந்து, காட்டை அடைந் தான். அதுகாலையில் அக்காட்டில் வாழ்ந்த இடிம்பன் என்னும் அரக்கனது தங்கையாகிய இடிம்பி என்பவள் அவனுக்கு எதிரில் வந்தாள். காட்டில் மனிதர் மணம் வீசுதலை உணர்ந்த இடிம்பன், அம் மனிதர்களைக் கொன்று, உடல்களைக் கொண்டு வருமாறு இடிம் பியை ஏவினான். அதனால்தான் இடிம்பி அங்கு வந்தாள். அவள் அழகிய உருவம் வாய்ந்தவள். அன்னவள் வீமனைக் கண்ட அளவில் அவன் மீது காதல் கொண்டு விட்டாள். எனவே, அவள் வீமன்

முதலியோரைக் கொல்லும் எண்ணத்தை விடுத்து வீமனை நோக்கித் தன்னை மணந்து கொள்ளுமாறும், இசைந்தால் அவனைத் தூக்கிக் கொண்டு வானத்தில் எழுந்து எங்கேயாவது போய் விடுவதாகவும், இன்பமாகக் காலம் கழிக்கலாம் என்றும் கூறினாள்.

இடிம்பியின் உரைக்கு வீமன் இசைவானோ? அவளை மணந்துகொள்ள அவன் மனம் விரும்பினாலும் தன் உடன் பிறந்தவர்களையும், தாயையும் விடுத்துச் செல்ல அவன் எங்ஙனம் இசைவான்? அவ்வளவில் இடிம்பி, விரைவில் தன்னுடன் வந்து விடுமாறும் இல்லையேல் தனது அண்ணனாகிய இடிம்பன் அங்கு வந்து அவனைக் கொன்று விடுவான் என்றும் கூறினாள். ஆயின் வீமன், 'எத்தகைய அரக்கனுக்கும் யான் அஞ்சமாட்டேன்; இவ்விடத்தை விடுத்து அகலமாட்டேன்; என்னை எதிர்த்தவன் எவனாயினும் அவனைக் கொன்று விடுவேன்' என்று வீரம் பேசினான்.

அந்நிலையில் ஆங்கு இடிம்பன் வந்து விட்டான். தனது தங்கை மனிதன் ஒருவனிடத்தில் காதல் உரைகள் பேசுதலைக் கண்டான். அவனுக்கு வீமனின் மீதும் பெருஞ்சினம் உண்டாகி விட்டது. எனவே அக்கணத்திலேயே அவன் வீரவுரை பேசிக் கொண்டே வீமனின் மீது பாய்ந்து விட்டான். வீமன் வாளா இருப்பானோ? தான் தூக்கி வந்த துணைவர்களையும்,

தாயையும் ஒரு புறத்தில் இறக்கி வைத்தான். விரைவில் இடிம்பனின் மீது பாய்ந்தான். இருவருக்கும் கடும் போர் நிகழ்ந்தது. இதற்கிடையில் தருமன் முதலியோர் துயில் நீங்கி விட்டனர். அவர்களும் இவ்விருவரது போரைப் பார்த்துக் கொண்டிருந்தனர். பொழுது விடியும் தருணத்தில் வீமன் இடிம்பனைக் கொன்று விட்டான். தருமன் முதலியோர் மகிழ்ச்சியடைந்தனர். அண்ணன் இறந்தமையால் துன்பமும், காதலன் வெற்றி பெற்றமையால் இன்பமும் ஒன்று கலந்து இடிம்பிக்கு உண்டாயின.

பிறகு இடிம்பி வீமனை வணங்கித் தன்னை மணந்து கொள்ளுமாறு வேண்டினுள். வீமனே அதற்கு மறுத்தான். அது கண்ட குந்தி, இடிம்பியை மணந்து கொள்ளுமாறு வீமனிடம் கூறினுள். தருமனும் அவ்வாறே கூறினுன். முடிவில் வீமன் இடிம்பியை மணக்க இசைந்தான்.

அதுகாலையில் ஆங்கு வியாச முனிவர் வந்தார். அவரைப் பாண்டவர்கள் வணங்கி வரவேற்றனர். அவர்களைப் பார்த்து வியாசர், 'நீங்கள் இக்காட்டிடத்தே வாழ்தல் தக்கதன்று. எனவே, நீங்கள் விரைந்து சாலிகோத்திர முனிவரது இருக்கைக்குச் செல்லுங்கள். அங்கே சில நாட்கள் தங்கி இருந்து விட்டு, அந்தணர் உருவங்கொண்டு வேத்திரகீயத்தை

அடையுங்கள்' என்று கூறிச் சென்றார். அவ்வாறே பாண்டவர்களும், குந்தியும், இடிம்பியும்சாலிகோத்திர முனிவரது இருக்கையை அடைந்தனர்.

அங்கு வீமனுக்கும் இடும்பிக்கும் கந்தருவ முறைப்படி திருமணம் முடிந்தது. இடிம்பி குந்திக்கு வேண்டிய பணிவிடைகளை மகிழ்ந்து செய்தாள். வீமனும் இடிம்பியும் கந்தனும் வள்ளியும் போலக் கலந்த காதலராய் இன்பம் துய்த்தனர். அவர்கட்கு அங்குப் பிறந்த மகனே கடோற்கசன் ஆவான். அவன் தன் தந்தையையும் ஏனையோரையும் வணங்கி, 'நான் என் தாயுடன் செல்கிறேன். நீங்கள் எங்களை எப்பொழுது நினைத்தாலும் நாங்கள் உடனே வருவோம்; நீங்கள் ஏவும் வேலையைச் செய்து முடிப்போம்' என்று கூறித் தன் தாயுடன் சென்று விட்டான்.

வியாசர் கூறியபடியே பிறகு பாண்டவர் ஐவரும் அந்தணர் உருவம் கொண்டு, வேத்திரகீயம் என்னும் இடத்தை அடைந்தனர். அங்கு அவர்கள் ஓர் அந்தணருடைய வீட்டில் தங்கினர். அவ் வீட்டு அந்தணர் மட்டுமின்றி, அவ்வூரிலிருந்த ஏனை அந்தணர்களும் பாண்டவர்க்கு விருந்தளித்துப் போற்றினர். பாண்டவர்களும் தாம் கொண்ட அந்தணர் கோலத்துடன் அவ்விடத்தே இனிமையாகக் காலம் கழித்தனர்.

அவ்வாறு வாழுங்காலத்தில், ஒருநாள் பாண்டவர் தங்கியிருந்த வீட்டிற்கு உரிய பார்ப்பனி அழுது கொண்டிருந்தாள். அதுகண்ட குந்தி இரங்கி, அவளது அழுகைக்கு உரிய காரணத்தைக் கேட்டாள். அவ்வளவில் அப்பார்ப்பனி, 'அம்மா! என்னென்று உரைப்பேன்! இவ்வூருக்கு அருகில் உள்ள காட்டில் ஓர் அசுரன் வாழ்கின்றான். அவனது பெயர் **பகாசுரன்.** அவன் பெருவலிமை வாய்ந்தவன்; இரக்கமற்ற இதயத்தினன்; நேர்மை தவறி நடப்பவன். அன்னவன் இவ்வூர்க்குள் நுழைந்து, எல்லோரையும் தின்னத் தொடங்கினான். அதுகாலையில் இவ்வூர் அந்தணர்கள் ஒன்றுகூடி அவனை வணங்கி, அவ்வாறு அவன் எல்லோரையும் நேர்மையின்றிக் கொல்லுதல் கொடியது என்றும், அவனுக்கு நாள்தோறும் ஒருவண்டி சோற்றையும், ஒரு மனிதனையும் உணவாக அனுப்ப இசைகின்றோம் என்றும், அவன் காட்டிலேயே வாழ்ந்து வருதல் வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டனர். அந்த அசுரனும் அந்த ஏற்பாட்டிற்கு இசைந்தான். அன்றுமுதல் நாள்தோறும் ஒவ்வொரு வீட்டவரும் முறையாக அவனுக்கு ஒரு வண்டிச்சோற்றையும், ஓர் ஆண்மகனையும் உணவாக அனுப்பிவருகின்றனர்.

'அம்மே! என்னே எங்கள் தீவினை! இன்று எங்கள் வீட்டு முறையேயாகும். ஒருவண்டிச்சோற்றை

அனுப்பத் தடையில்லை. ஆயின் எங்கட்கு ஒரே மகன் உள்ளான். அவனை எவ்வாறு அசுரனுக்கு உணவாக அனுப்பமுடியும்? அவன் இல்லாமல் யாங்கள் எப்படி வாழ்வோம்? எங்கள் குலம் எப்படித் தழைக்கும்? இக்காரணம்பற்றியே யான் அழுதேன். தாயே! என் செய்வேன்?'' என்று கூறிப் புலம்பினாள்.

பார்ப்பனியின் உரையைக் கேட்ட குந்தியின் உள்ளம் உருகியது. அவள் தன் மக்களுள் ஒருவனாகிய வீமனை அனுப்பி, அந்த அசுரனைக் கொன்று ஒழிக்கத் திட்டமிட்டாள். ஆயின், அவள் அத்திட்டத்தைப் பார்ப்பனியினிடம் கூறாமல், அவளை நோக்கி, 'அம்மையே! வருந்தாதீர்கள். எங்களை நீங்கள் போற்றி வருகின்றீர்கள். உங்களுக்கு வந்துள்ள துன்பத்தைத் துடைத்தல் எங்களுடைய கடமையன்றோ? எனக்குப் புதல்வர்கள் ஐவர் உளர். அவர்களுள் ஒருவனை உன் மகனுக்குப் பதிலாக யான் அனுப்புகின்றேன். அவன் இன்று அசுரனுக்கு உணவாவான்' என்றாள். பார்ப்பனி முதலில் அதற்கு இசைந்திலள். ஆயின் குந்தி வற்புறுத்தவே, அவளும் அதற்கு ஒருவாறு இசைந்தாள்.

பகாசுரனுக்கு உரிய உணவுகள் யாவும் ஆக்கப்பட்டன. அவை ஒரு வண்டியில் ஏற்றப்பட்டன. குந்தி வீமனை அழைத்து, பகாசுரனது வரலாற்றைக்

கூறி, அவனைக் கொன்று வருமாறு ஏவினாள். வீமனும் பெருமகிழ்ச்சியுடன் அதற்கு இசைந்தான்; உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்டிருந்த வண்டியில் ஏறி அமர்ந்து, அதனை ஓட்டிச் சென்றான்; காட்டை அடைந்தான்; பகாசுரன் தங்கியிருந்த இடத்தை நெருங்கினான். அவன் முதலில் அந்த அசுரனுடன் போர் செய்ய விரும்பவில்லை. தான் ஓட்டி வந்த வண்டியில் உள்ள உணவினை உண்டு தீர்த்த பிறகே அவனுடன் போர்செய்ய அவன் விரும்பினான். எனவே அவன் ஒரு புறத்தே வண்டியை நிறுத்தி, உணவினை உண்ணலானான்.

உரிய காலத்தில் தனக்கு வேண்டிய உணவு வாராமையால், வண்டி வரும் வழியில் விழியைச் செலுத்தி நின்றான் பகாசுரன். வீமன் வண்டி யுணவை உண்ணுதலை அவன் கண்டுவிட்டான். அவனுக்குச் சினம் பொங்கியது. எனவே, அவன் விரைந்துவந்தான்; வீமனுடைய பிடரியில் குத்தலானான். அவனுடைய குத்துக்களால், வீமனது வாயிற் புகுந்த உணவு எளிதில் வயிற்றினிடத்தே இறங்கியது. அதனால் வீமன் பகாசுரனைத் தடைசெய்யாமல் உண்டுகொண்டிருந்தான். பகாசுரன் குத்திக்கொண் டிருக்கும்பொழுதே வீமன் தான் ஓட்டி வந்த வண்டியில் இருந்த உணவு முழுவதையும் உண்டு முடித்துவிட்டான். பிறகே அவன் பகாசுரனுடன் போருக்குச் சென்றான்.

வீமனுக்கும் பகாசுரனுக்கும் கடும்போர் மூண்டது. அவர்கள் குத்திக்கொண்டனர்; மோதிக்கொண்டனர்; இடித்துக்கொண்டனர்; உதைத்துக்கொண்டனர். இவ்வாறு நெடுநேரம் போர் நடந்தது. முடிவில் வீமன் பகாசுரன்மீது அமர்ந்து அழுத்தியவாறே, அவனது கழுத்தைத் திருகிக் கொன்றுவிட்டான். பிறகு அந்த அசுரனது பிணத்தை வண்டியில் போட்டுக்கொண்டு, தான் தங்கியிருந்த ஊரை அடைந்தான். பகாசுரன் கொல்லப்பட்ட நிகழ்ச்சியை அறிந்த நகரமக்களும், தருமன் முதலியோரும் வீமனைப் பலவாறு பாராட்டிப் போற்றினர். பாண்டவர்களும் அவ்வூரிலேயே இன்பமாகக் காலங் கழித்து வந்தனர்.

5. திரௌபதி மாலையிட்ட சருக்கம்

" குண்டலம் இலங்கச் சங்கும்
ஆழியும் குலவு காந்தி
மண்டலம் துதிக்கும் திங்கள்
இரவிமேல் வடிவம் தூண்ட
விண்தலத்(து) இலங்கு பீத
அவுணனை வெறுத்து வீழ்த்த
புண்டரீ கங்கள் பூத்த
புயலினைப் போற்றி செய்வாம். "

[இலங்க - விளங்க. ஆழி - சங்கு. திங்கள் - சந்திரன். இரவி-சூரியன். புண்டரிகம் - தாமரை. புயல் - மேகம் போன்ற நிறத்தினை உடைய திருமால்.]

பாண்டவர்கள் இவ்வாறு வேத்திரகீயத்தில் வாழ்ந்து வருங்கால், பாஞ்சால மன்னனாகிய யாக சேனன் யாது செய்தான்? அவனது மகளாகிய திரௌபதி மணப்பருவம் அடைந்திருந்தாள். தன்னை வென்ற அருச்சுனனுக்கு மாலையிடும் பொருட்டன்றோ யாகசேனன் அவளை அரிதில் பெற்றான்? பாண்டவர்கள் அரக்குமாளிகை எரியுங்கால் இறந்துபட்டனர் என்னும் செய்தியை அவன் மனம் உண்மை என்று ஏற்றுக்கொள்ளவில்லை. வலிமையும், தெய்வத்தன்மையும் வாய்ந்த பாண்டவர்கள் அத்துணை எளிதில் இறந்துபட்டிருக்க முடியாது என்பதே அவனது எண்ணம். எங்ஙனமேனும் பாண்டவர்கள் பிழைத்திருப்பர் என்று அவன் கருதினான். அவ்வாறு அவர்கள் பிழைத்திருந்தால் அவர்களைத் தன்பால் வருவித்தற்குரிய வழியினை அவன் ஆராய்ந்தான். திரௌபதிக்குச் சுயம்வரம் அமைப்பதே அதற்குரிய வழி என்று அவனுக்குத் தோன்றியது. எனவே, அவன் ஒரு நன்னாளைக் குறிப்பிட்டு, அந்நாள் திரௌபதிக்குச் சுயம்வர நாள் என்று அரசர்கட்கெல்லாம் அறிவித்தான். பலநாட்டு அரச

குமாரர்களும் குறிப்பிட்டநாளில் சுயம்வர மண்டபத்தில் வந்து கூடினர்.

இவ்வாறு திரௌபதிக்குச் சுயம்வரம் அமைக்கப் பெற்றிருந்த நிகழ்ச்சியைப் பாண்டவர்களும், குந்தியும் கேள்வியுற்றனர். அவர்கள் காலம் தாழ்ப்பரோ? செய்தியை உணர்ந்த அளவில் தம் அந்தணர் உருவுடன் அவர்கள் பாஞ்சால நகரை நோக்கி விரைந்தனர். அவர்கள் செல்லுங்கால் வியாசர் எதிர்ப்பட்டார். அவரைப் பாண்டவர் வணங்கினர். அவர் பாண்டவர்களைப் பார்த்து, 'உங்களுள் ஒருவற்குத் திரௌபதி மாலையிடுவாளாயின், நீங்கள் உங்களுடைய உண்மை யுருவை வெளிப்படுத்துங்கள்' என்று கூறிச் சென்றார். பாண்டவர்கள் இரவு முழுவதும் நடந்து சென்றனர். இடைவழியில் **சித்திராதன்** என்னும் கந்தருவன் ஒருவன் பாண்டவர்களைத் தடுக்கவே, அருச்சுனன் அவனை வென்றான். பின்பு பாண்டவர்கள் **தௌமியர்** என்னும் முனிவரை வணங்கி, அவரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு பாஞ்சால நகரத்தை அடைந்தனர்.

அந்நகர் பலவாறு அழகு செய்யப்பட்டிருந்தது' அந்நகரின் தெருக்களிலெல்லாம் கொடிகள் கட்டப் பெற்றிருந்தன. அவற்றின் அசைவை மனக்கண்ணால் கற்பனை செய்து பார்த்த வில்லிபுத்தூரார், தமது

குறிப்பை அக்கொடிகளுக்கு ஏற்றிப் பாடியுள்ளார். அவை பாண்டவர்களைக் கைகாட்டி அழைப்பனபோல் அசைந்தன என்னும் கருத்துப் படுமாறு அவர்,

" குழைப்புறம் கடந்த செங்கண்
குறுநகைக் கொவ்வைச் செவ்வாய்
இழைப்பொலி முலையி னுளுக்(கு)
இற்றைநாள் வதுவை என்று
மழைப்புற மாடம் ஏறி
வருநரை மலர்க்கை காட்டி
அழைப்பன போன்ற வீதி
அணிகொடி ஆடை எல்லாம். "

[குழை - தோடு. இழை - அணிகலம். வதுவை-திருமணம். மழை- மேகம். வருநரை - வரும் பாண்டவரை.]

என்று பாடியுள்ளார்.

பாண்டவர்கள் அந்நகரில் புகுந்த காலையில் பல வகைப்பட்ட நல்ல சகுனங்கள் உண்டாயின. அவர்களும் மகிழ்ச்சியுடன் விரைந்து நடந்து, குந்திதேவியைக் குயவன் ஒருவனது வீட்டில் இருத்தி, சுயம்வர மண்டபத்தை அடைந்தனர்.

பாண்டவர்கள் அந்தணர் உருவுடன் சுயம்வர மண்டபத்திற்கு வந்திருத்தலை யாகசேனன் அறிய மாட்டான். திரௌபதி அருச்சுனனுக்கே மாலையிட

உறுதிகொண்டிருந்தாள். அவன் வந்திலன் என்று கேள்வியுற்று அவளும் வருந்தினள். எனினும், என் செய்வது? அரசர்கள் யாவரும் வந்துகூடியபிறகு, சுயம்வரத்தை நிறுத்தமுடியுமா? சுயம்வர மண்டபத்திற்குத் திரௌபதியை அவளுடைய தோழியர் அழைத்துவந்தனர். திரௌபதியின் உருவையும் திருவையும், அழகையும் எழிலையும் கண்ட அரசகுமரர் தீயில் இடப்பெற்ற நெய் உருகுதலைப் போன்று உருகினர் என்று ஆசிரியர் பாடியுள்ளார்.

அரசர்கள் ஒவ்வொருவரும் தமக்கே மாலையிடுவாள் என்று எண்ணி இன்புற்றிருக்கையில், திரௌபதியின் உடன்பிறந்தவனாகிய திட்டத்துய்மன் எழுந்து நின்று, 'அரசகுமாரர்களே! யான் கூறுவனவற்றைக் கேளுங்கள். திரௌபதியின் திருமணத்திற்கென்று யாங்கள் ஒரு கட்டுப்பாடு அமைத்துள்ளோம். வட்டவடிவமான பொறி ஒன்று ஈண்டு உள்ளது. அதனை நோக்குங்கள். அப்பொறியின் நடுவில் சுழன்றுகொண்டிருக்கும் குறி ஒன்றினையும் பாருங்கள். பொறியின் பக்கத்தில் வில்லும் அம்பும் உள்ளன. வில்லினை வளைத்து, அம்பினை எய்து, சுழன்றுகொண்டிருக்கும் குறியை வீழ்த்தும் வீரனுக்கே திரௌபதி மாலையிடுவாள். இவ்வீரச் செயலைச் செய்யும் வீரன் ஈண்டு உள்ளானோ?' என்றான். திட்டத்துய்மன் அறி

வித்த நிபந்தனையைக் கேட்ட அரசர்கள் பலர் அஞ்சினர்; சிலர் வெட்கத்துடன் தலை குனிந்தனர்.

அதுகாலையில் தோழி ஒருத்தி அம்மண்டபத்தில் வீற்றிருந்த அரசர்களை ஒவ்வொருவராகத் திரௌபதிக்கு அறிமுகப்படுத்தினள். துரியோதனன், துச்சாதனன், சகுனி, அசுவத்தாமன், கன்னன், பலராமன், கண்ணன், சாத்தகி, சிசுபாலன், சராசந்தன், சல்லியன் முதலிய அரசர்கள் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தப் பெற்றனர். அவ்வாறு அறிமுகப்படுத்துவதாக வில்லிபுத்தூரார் பாடியுள்ள பாடல்கள் சுவை வாய்ந்தவை. அவற்றுள் கன்னன் அறிமுகப்படுத்தப் பெற்ற செய்யுள் மிகச் சிறந்ததாகும். அது வருமாறு:—

"பெண்மைக்(கு) இரதி எனவந்த
பெண் ஆர் அமுதே பேர்உலகில்
உண்மைக்(கு) இவனே வலிக்குஇவனே
உறவுக்(கு) இவனே உரைக்குஇவனே
திண்மைக்(கு) இவனே நெறிக்குஇவனே
தேசுக்(கு) இவனே சிலைக்குஇவனே
வண்மைக்(கு) இவனே கன்னன்எனும்
மன்னன் கண்டாய் மற்றிவனே."

(இரதி - மன்மதனின் மனைவி. தேசு - ஒளி. சிலை - வில். வண்மை - கொடை.]

எத்துணை அழகிய செய்யுள்! இத்தகைய செய்யுட்கள் பலவற்றை வில்லிபுத்தூரார் தமது நூலின்கண் அமைத்துள்ளார்.

திரௌபதியின் உருவை நேரில் கண்டவுடன் அவளை மணக்க விரும்பிய அரசர்கள் பலர் பொறியின் குறியை எய்தி வீழ்த்த முயன்றனர். துரியோதனன் முதலியோர் முயற்சியில் பெருந்தோல்வியுற்றனர். சல்லியன், கன்னன் முதலியோர்களுடைய முயற்சி வெற்றியை அளிக்கும்போல் இருந்தது. ஆனால் முடிவில் அவர்களும் தோல்வியே அடைந்தனர். பெருவீரர்களும் தோல்வியடையவே, அச்சபையில் முயற்சி செய்ய முன்வருவோர் இலராயினர்.

அரசர்களுடைய முயற்சிகளையும், தோல்விகளையும் கண்டுகொண்டிருந்தனர் பாண்டவர். வேறு அரசகுமாரர் எவரும் முயற்சிசெய்ய முன்வராமல் இருக்கவே, அந்தணர் உருவில் இருந்த அருச்சுனன் எழுந்தான்; திட்டத்துய்மனை அழைத்து, ' ஐய! அந்தணர்களுள் ஒருவர் இக்குறியினை எய்தால், திரௌபதி அவ்வீரருக்கு மாலையிடுவாளோ?' என்று கேட்டான். அவ்வளவில் திட்டத்துய்மன், 'அந்தண இளைஞரே! அதற்கு ஐயம் என்ன? அந்தணராயினும், வெற்றி பெற்றோர்க்குத் திரௌபதி மாலை இடுவாள்' என்றான். அதுகேட்ட அருச்சுனன் பொருக்கெனப் பொறியை

நோக்கி நடந்தான்; எடுத்தான் வில்லை; தொடுத்தான் அம்பினை; இலக்கை ஒரு நொடியில் அறுத்துத் தள்ளினான். அங்கிகழ்ச்சியைக் கண்ட அந்தணர்கள் மகிழ்ச்சியால் பேரொலி எழுப்பினர். அரசர்களோ நாணித் தலை குனிந்தனர். திரௌபதியும், இத்தகைய வீரச் செயலைச் செய்தவன் அருச்சுனனே யாவான் என்று துணிந்து, அவனது கழுத்தில் மணமாலையைச் சூட்டினாள், பின்பு அருச்சுனன் அவளுடனும், தன் உடன் பிறந்தவர்களுடனும் தன் தாயை விடுத்துவந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டான்.

அங்கிகழ்ச்சியைக் கண்ட துரியோதனனுக்குப் பொறுமை மிகுந்துவிட்டது. அவன் அரசர்களை நோக்கி, 'மன்னர்களே! நம்மால் செய்ய இயலாத செயலை அந்தணன் ஒருவன் செய்துவிட்டானே. அவனை நாம் செல்லவிடலாமா? அவனுடன் போர் செய்து, அவனைக் கொன்றால்தான், நம்மை நம் குடிகள் மதிப்பர். எனவே, கிளம்புங்கள். யாவரும் சென்று அவனை மடக்கிப் போர் புரிவோம்' என்றான். அவனது உரையைக் கேட்ட அரசர்கள் யாவரும் திரண்டு போர் தொடங்கலாயினர்.

அருச்சுனன் திரௌபதியைத் தருமனுக்குப் பக்கத்தில் நிறுத்திவிட்டு, தன்னை எதிர்த்து வந்தோரைத் தாக்கலானான். வீமனும் அருச்சுனனுக்குத் துணையாக

எழுந்தான். இனி என்ன? காற்றும் தீயும் கலந்து விட்டால், என் செய்வது? எதிர்த்துவந்த அரசர்கள் யாவரும் பெருங்காற்றின் முன் அகப்பட்ட பூளைப் பஞ்சுகளைப்போல் பறந்தனர். அருச்சுனனுக்கு ஆற்ருமல் கன்னன் வலியிழந்தான். வீமனை எதிர்த்த சல்லியன் தோற்ருன். கன்னனும் சல்லியனும், 'இவர்கள் வேதம் ஓதும் வேதியர்கள். இவர்களுக்குத் தோற்ருல் நம்மை உலகம் பழிக்கும். இவர்களை வென்ருலும் நம்மை யாரும் புகழமாட்டார்கள். எனவே நாம் திரும்பிவிடுவோம்' என்று சொல்லிக் கொண்டே சென்றுவிட்டனர். இந்நிகழ்ச்சியை வில்லி புத்தூரார்,

"குன்ருல்மெய் வகுத்தனைய வீமன் தன்மேல்
கொல்இயல்செய் சல்லியனைக் குத்தி வீழ்த்திக்
கன்ருல்முன் விளவுஎறிந்த கண்ணன் என்னக்
கால்முடியோ(டு) உறவனைத்து வான்மேல் வீசி
நின்ருன்மற் றவன்அயலே தெறித்து வீழ்ந்து
நெஞ்சுஒடிந்தான் இருவரும்முன் நில்லா ராகி
வென்ருலும் தோற்ருலும் வசையே வெம்போர்
வேதியரோ(டு) உடற்றல்என மீண்டு போனர்."

[மெய் - உடம்பு. வகுத்தனைய - *அமைக்கப்பெற்ருல் போன்ற.* கன்று - *கன்றின் உருவில் வந்த அசுரன்.* விளவு - *விளாமரத்தின் உருவில் நின்ற அசுரன், கன்றினல் விளவினை எறிந்து,*

இரண்டு அசுரர்களையும் கன்னன் கொன்றான். **மற்றவன்** - கன்னன். **இருவரும்** : கன்னனும் சல்லியனும். **வசை** - பழி. **உடற்றல்** - போர் செய்தல்.]

என்று பாடியுள்ளார். எத்துணை அருமையான கருத்தினை ஆசிரியர் ஈண்டு அமைத்துள்ளார்! கன்னனாலும் சல்லியனாலும் பாண்டவர்களை எதிர்த்து நிற்க இயலவில்லை. தோற்று ஓடவும் அவர்கள் விரும்பவில்லை. இந்நிலையில் அவர்கள் போரை நிறுத்த விரும்பினர். எப்படி நிறுத்துவது? போரை நிறுத்துதற்கு ஒரு காரணம் வேண்டுமன்றோ? வில்லிபுத்தூரார் பொருத்தமான ஒரு காரணத்தைக் கற்பித்துக் கூறியுள்ளார். அவர், "வென்றாலும் தோற்றாலும் வசையே. வெம் போர் வேதியரோடு உடற்றல் என மீண்டு போனார்" என்று தக்கதொரு காரணம் காட்டியுள்ளார். கவிஞரின் திறமைக்கு ஒப்பு உண்டோ?

தம்மை எதிர்த்து வந்தவர்கள் யாவரும் ஓடிய பிறகு, அருச்சுனன் முதலியோர் திரௌபதியுடன் தம் தாய் தங்கியிருந்த இடத்தை அடைந்தனர். குந்தி உட்புறத்தே இருந்தாள். வீட்டின் உட்புறம் நுழையும்பொழுதே பாண்டவர்கள் மகிழ்ச்சியுடன், 'அம்மா! இன்று நாங்கள் ஒருவிதமான பிட்சை (ஐயம்) பெற்று வந்தோம். இதனை என் செய்வது?' என்று குறிப்புப் பொருள்படுமாறு கூறினர். உள்ளிருந்த குந்தி, தனது

இயற்கைக்கு ஏற்ப, 'அப்படியா? அதனை ஐவரும் உண்ணுங்கள்' என்ருள். ஏதோ உண்பதற்குரிய பொருள் ஒன்றையே அவர்கள் கொண்டுவந்திருப்பர் என்று கருதியே அவள் அவ்வாறு கூறினுள். இவ்வாறு கூறிக்கொண்டே குந்தி வெளியில் வந்தவள் திரௌபதியைப் பார்த்தவுடன், 'ஆ! இவர்கள் இவளையா அவ்வாறு குறிப்பிட்டனர்! அந்தோ! ஆராயாமல் ஐவரும் நுகருமாறு கூறினேனே' என்ருள். அவ்வளவில் தருமன் தன் தாயை வணங்கி, 'அம்மா! நீ கூறிய உரை வேத உரையாகும். அவளை நாங்கள் ஐவருமே மணப்போம்' என்ருன். குந்தியும் ஒருவாறு தேறினுள்.

திரௌபதியால் மாலே சூட்டப் பெற்றவன் அருச்சுனனே என்பதையும், பாண்டவர்கள் தப்பிப் பிழைத்த செய்தியையும் யாகசேனன் கேட்டு மகிழ்ச்சியடைந்தான். ஆனல் அந்த ஐவரும் சேர்ந்து திரௌபதியை மணக்கப் போகின்றனர் என்பதை உணர்ந்தவுடன் அவன் வருந்தினுன். அந்நிலேயில் ஆங்கு வியாசர் வந்தார். அவர் யாகசேனனது வருத்தத்தை உணர்ந்து, அவனை நோக்கி, "யாகசேன! கலங்காதே. திரௌபதி பாண்டவர் ஐவர்க்கும் உரியவள். அதற்குரிய காரணத்தைக் கூறுகின்றேன். திரௌபதி முன்பு ஒரு பிறப்பில் நளாயினி எனும் பெயருடன் இருந்தாள்.

அப்பொழுது அவளுக்குக் கணவராக இருந்தவர் மௌத்கல்யர் என்னும் ஒரு முனிவர் ஆவார். அவர் நளாயனியின் கற்பைச் சோதிக்க எண்ணி, குஷ்ட நோயைக் கொண்டார். அதனுல் அவருடைய விரல்கள் அழுகின. அவர் உண்டு எஞ்சியதையே நளாயினி உண்ணவேண்டி நேரிட்டது. நோயினுல் அவருக்குச் சினமும் அடிக்கடி வந்தது. ஆயின் நளாயினி அந்நிலையிலும் தன் கணவனை வெறுக்கவில்லை. அவருக்கு வேண்டிய பணிவிடைகளை அவள் வெறுப்பின்றிச் செய்தாள். அவளது கற்பின் திட்பத்தை உணர்ந்த முனிவர் மகிழ்ந்து, பிறகு தமது நோய் வடிவத்தை மாற்றிக்கொண்டு, அவளைப் பலவாறு போற்றினுர்.

"அதன்பின்பு மறுபிறப்பில் நளாயினி இந்திரசேனை என்னும் பெயருடன் விளங்கினுள். அப்பிறப்பிலும் அவள் மௌத்கல்ய முனிவரையே மணக்க விரும்பி தம்மை மணந்துகொள்ளும்படி அவரை வேண்டினுள். முனிவரோ இல்வாழ்க்கையில் ஈடுபட விரும்பாமல், அவளது வேண்டுகோளுக்கு இசைய மறுத்துவிட்டார். இதனுல் வருந்திய இந்திரசேனை, சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தாள். சிவபிரானும் அவளது தவத்திற்கு மகிழ்ந்து, அவள் முன் வந்து, அவள் விரும்பிய வரத்தைக் கேட்குமாறு கூறினுர். அவள், 'எனக்குக் கணவனைத் தருக' என்று

ஐந்துமுறை கூறினுள். சிவபிரானும் ஐந்துமுறை 'அவ்வாறே கணவனைப் பெறுக' என்று கூறினர். இந்திரசேனையே திரௌபதியாகப் பிறந்துள்ளாள். சிவபிரான் தந்த வரத்திற்கு ஏற்ப, இவர் ஐவரைக் கணவராகப் பெறத்தான் வேண்டும். சிவபிரானது சினத்திற்கு ஆளாகிய இந்திரர்கள் ஐவரே இப்பிறப்பில் பாண்டவர்களாகத் தோன்றியுள்ளனர். அந்த இந்திரர்கள் ஐவரும் இந்திரசேனைக்குக் கணவனுதல் வேண்டும் என்று சிவபிரானும் கட்டளையிட்டிருக்கிருர். எனவே, திரௌபதி பாண்டவர் ஐவரையும் மணத்தலில் பிழையில்லை'' என்று திரௌபதியின் பழம்பிறப்புக்களின் வரலாற்றை விளக்கமாகக் கூறிச் சென்றுர். துருபதனும் தெளிந்து பாண்டவர் ஐவருக்கும் திரௌபதியை மணம் முடித்துக்கொடுக்க முற்பட்டான்.

பின்பு ஒரு நல்லநாளில் பாண்டவர் ஐவர்க்கும் திரௌபதிக்கும் திருமணம் நடைபெற்றது. தௌமிய முனிவரே முன்னின்று திருமணத்தை முடித்து வைத்தார். யாகசேனன் பாண்டவர்கட்கு வேண்டுவன வற்றை அளித்துச் சிறப்புச் செய்தான். பாண்டவர்கள் திரௌபதியை மணந்த செய்தியைக் கேட்ட துரியோதனன் பெரும்படையுடன் போர்க்கு வந்தான். போரும் நடந்தது. போரில் அவன் தன் துணைவர்க

னுடன் தோற்று ஓடினன் என்று சொல்லவும் வேண்டுமோ?

வெற்றிபெற்ற பாண்டவர்களைத் திருதராட்டிரன் அத்தினபுரிக்கே அழைத்துக்கொண்டான்; அவர்கட்குரிய நாட்டின் பகுதியை அளித்தான். பாண்டவர்களும் அத்தினபுரியில் வாழ்ந்து வரலாயினர்.

6. இந்திரப் பிரத்தச் சருக்கம்

"வேதமும் வேதம் விளம்புமெய்ப் பொருளும்
அப்பொருள் விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனும்
அப்பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும் உலகும் படைத்துஅளித்(து) அழித்து
ஞானமாய் அகிலமும் நிறைவுற்(று)
ஆதியும் நடுவும் முடிவுமாய் நின்ற
ஆதியான் அடிஇணை பணிவாம்."

[பஞ்சபூதம் - மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம் பெரும்பூதம். புலன் - ஐம்புலன். ஞாதம் - ஆத்மா. ஆதியான் - திருமால். இணை - இரண்டு.]

பாண்டவர்களுடன் பகை கொள்வது தகாது என எண்ணிய திருதராட்டிரன் ஒரு நல்லநாளில் தருமனுக்கு முடி சூட்டினன். தருமனும் தன் தம்பியர் துணையுடன் நாட்டை நன்கு ஆண்டுவந்தான். துரியோதனனே பாண்டவர்களிடம் கொண்ட பகையை விடவேயில்லை. அது வளர்ந்துகொண்டே யிருந்தது. அதனை உணர்ந்த தருமன், இந்திரப்பிரத்தம் என்னும் இடத்திற்குச் சென்று தங்குதலே தக்கது என்று முடிவு செய்தான். அதன்படியே அவன் தன் தம்பிமாருடன் அவ்விடத்தை அடைந்தான். இந்த இடம் பாழாக இருந்தது. எனவே, அந்த நகர் புதுப்பிக்கப் பட்டது. கண்ணபிரான் அருள் பாண்டவர்கட்கு இருந்தது. ஆகவே, தேவர் உலகத் தச்சனுகிய விசுவ கர்மாவே ஆங்குவந்து, அந்நகரைப் புதிய நகராக மாற்றினன்.

மண்ணுலகத்தில் சிறந்த நகரம் இந்திரப்பிரத்தமே என்று யாவரும் சொல்லுமாறு அந்நகர் அழகுடன் விளங்கியது. அந்நகரின் அழகைத் தேவர்களும் பாராட்டினர். அந்தகைய அழகிய நகரில்

இருந்தவாறு தருமன் செங்கோல் செலுத்திவந்தான். அதுகாலையில் ஆங்கு நாரதர் வந்து, பாண்டவர்கட்கு அறவுரை கூறத் தொடங்கி, அவர்களைப் பார்த்து, 'உடன்பிறந்த நீங்கள் ஐவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒரு பெண்ணின் காரணமாகப் பகை கொண்டு போர் செய்து மாண்டவர் பலர். அத்தகைய பகை உங்களுக்கு மூளுதல் கூடாது. நீங்கள் ஐவரும் திரௌபதியை மணந்து கொண்டிருக்கிறீர்கள். அவளுடன் ஆண்டுக்கு ஒருவராக முறைப்படி வரிசையாக இல்வாழ்க்கை நடத்துங்கள். உங்களுள் ஒருவர் அவளுடன் இல்வாழ்க்கை நடத்துங்கால், அவளை மற்றவர்கள் பார்த்தல் கூடாது. அவ்வாறு மற்றவர்களுள் ஒருவர் பார்க்க நேரிட்டால், அந்தப் பாவம் நீங்குதற்பொருட்டு, அவர் புண்ணிய நீர்த்துறைகள் தோறும் சென்று முழுகி வருதல் வேண்டும். அஃதாவது தீர்த்த யாத்திரை செய்து திரும்பவேண்டும்' என்று கூறிச் சென்றார். நாரதர் கூறிய ஏற்பாட்டிற்குப் பாண்டவர்களும் இசைந்தனர். அவ்வாறே அவர்கள் வரிசையாக ஒவ்வொருவராய் ஒவ்வோராண்டு திரௌபதியுடன் இல்லறம் நடத்துவாராயினர்.

7. அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்

"அருமாமறை உணராதுஅல மருசேவடி அருளால்
இருமாநில மிசைதோய்வுற இயல்ஆனிரை வழிபோய்
திருமாநிகர் இடைமாதர்கள் திகழ்வேல்விழி மகிழ
வருமாதவன் விளையாடலை மறவாதுஎன(து) உளமே."

[அலமரு - சுழல்கின்ற. ஆனிரை - பசுக்கூட்டம். இடைமாதர் - கோபியர். மாதவன் - கண்ணன்.]

தருமன் மனுநீதி தவறுமல் செங்கோல் செலுத்தி வந்த காலத்தில், ஒருநாள் அந்தணர் ஒருவர் அருச்சுனனிடம் வந்து, வேடர்களால் தங்களுக்குத் துன்பம் நேர்ந்துவிட்டது என்று முறையிட்டார். அதுகேட்ட அருச்சுனன், அவ்வேடர்களுடன் விரைந்து போர் செய்யக் கருதினன். எனவே, அவன் தன்னுடைய வில்லையும், அம்புகளையும் எடுப்பதற்காக, அரண்மனையின் உட்புறத்தே விரைந்து சென்றன். அவ்வாறு செல்லுங்கால், தருமனுடன் விளையாடிக்கொண்டிருந்த திரௌபதியின் அடிகளை அவன் காண நேர்ந்துவிட்டது. அவ்வளவில் நாரதர் கூறிய உரை அவனது நினைவுக்கு வந்தது. அதனுல் அவன் வேடர்களுடன்

போர் செய்து திரும்பிய பிறகு தீர்த்த யாத்திரை செல்ல முடிவு செய்துவிட்டான். அங்கினேவுடன் அவன் விரைந்து சென்றான்; வேடர்களை வென்றான்; அந்தணரின் துயரத்தைத் தீர்த்தான்; உடன்பிறந்தார்களின் இசைவைப் பெற்றான்.

அருச்சுனன் தன் யாத்திரைக் கேற்ற கோலம் கொண்டு, ஒவ்வொரு புண்ணியத் துறைக்கும் செல்லத் தொடங்கினன். முதலில் அவன் கங்கையில் நீராடினன். அப்பொழுது நாகர் உலகக் கன்னியாகிய உலூபி என்பவளை அவன் காணநேரிட்டது. அவளது அழகில் மயங்கிய அருச்சுனன் அவளை மணந்தான். அவர்கட்கு **இராவான்** என்னும் மைந்தன் பிறந்தான். பிறகு அருச்சுனன் தன் யாத்திரையைத் தொடங்கித் தென்னாட்டை அடைந்தான். ஆங்கு, திருவேங்கடம், காஞ்சிப்பதி, திருவண்ணமலை, திருக்கோவலூர், திருவெண்ணெய்நல்லூர் முதலிய தலங்களில் எழுந்தருளியிருக்கும் கடவுளரை வணங்கி, இடைப்பட்ட புண்ணிய நீர்த்துறைகளில் முழுகிய அருச்சுனன் பின்பு, சிதம்பரத்தில் நடமிடும் நடராசப்பெருமானையும், திருவரங்கத்தில் அரிதுயில் கொள்ளும் அரங்கநாதரையும் வணங்கி, காவிரியில் நீராடி மதுரையை அடைந்தான்.

மதுரையை ஆண்டுவந்த **சித்திரவாகனன்** என்னும் பாண்டிய மன்னன் அருச்சுனனைப் போற்றி உப

சரித்தான். அங்கு வாழ்ந்தகாலையில் அருச்சுனன் அப் பாண்டிய மன்னனது மகளாகிய சித்திராங்கதையைக் காண நேரிட்டது. அவளுடைய அழகில் மயங்கிய அருச்சுனன் அவளை மணக்க விரும்பினன். அவளும் அருச்சுனனை மணக்க விரும்பினள். அவர்களுடைய காதலை உணர்ந்த மன்னனும் மகிழ்ச்சியுடன் அவ்விரு வர்க்கும் திருமணத்தை முடித்துவைத்தான். அவ்விரு வரும் இன்பமாக வாழ்ந்தகாலத்தில், அவர்கட்குப் பப்புருவாகனன் என்னும் மகன் பிறந்தான். பிறகு சிறிதுகாலத்தில் அருச்சுனன் அவ்விடத்தை விடுத்துத் தன் யாத்திரையை மேற்கொண்டான்.

தென்னட்டில் யாத்திரையை முடித்த அருச்சுனன் வடநாடு நோக்கித் திரும்பினன். அவன் பல தலங் களை வணங்கி, புண்ணிய ஆறுகள் பலவற்றுள் முழுகி, துறவுக்கோலத்துடன் துவாரகையை அடைந்தான். துவாரகையில் அவன் ஒரு மரத்தின் அடியில் தங்கி, கண்ணனை எண்ணினன். கண்ணனும் அங்கு வந்து, அருச்சுனனுடன் அளவளாவிச் சென்றார். அவருக்குத் தம் தங்கையாகிய சுபத்திரையை அருச்சுனனுக்கு மணம் முடித்துவைக்க விருப்பம் இருந்தது. ஆயின் தமது தமையனராகிய பலராமர் அதற்கு இசைய மறுப்பார் என்பதையும் அவர் அறிவார். எனவே அவர், கள்ளத்தனமாக அம்மணத்தை முடித்துவைக்க முடிவுசெய்து, அதற்கேற்ற சூழ்ச்சியையும் செய்தார்.

அருச்சுனன் ஓர் உண்மைத் துறவிபோல் கோலம் கொண்டிருந்தானல்லவா? அத்துறவியை வணங்குதல் நலம் தரும் என்று கண்ணன் பலராமருக்கும், சுபத்திரைக்கும் கூறினர். சுபத்திரையோ அருச்சுனனையே மணக்க வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தாள். அவனை மணக்கும் பேற்றினைப் பெற அவள், கண்ணன் குறிப்பிட்ட துறவியை வணங்கி, அப் பேற்றினைப் பெறலாம் என்று முடிவு செய்தாள். கண்ணனின் சூழ்ச்சிப்படியே பலராமர் சுபத்திரையுடன் அருச்சுனத் துறவியை வணங்கினர். சுபத்திரையை நேரில் கண்ட அருச்சுனன், அவள்மீது அடங்காக் காதல் கொண்டுவிட்டான். கண்ணன் தந்திரமாக, அத்துறவிக்குப் பணிவிடை செய்து வருமாறு சுபத்திரைக்குக் கூறி, பலராமருடன் சென்று விட்டார்.

அருச்சுனத் துறவியுடன் தனிமையில் உரையாடுங்கால் சுபத்திரை, பாண்டவர்களைப் பற்றியும், குறிப்பாக அருச்சுனனைப் பற்றியும் நலம் வினவினள். அதிலிருந்து சுபத்திரை தன்மீது காதல் கொண்டுள்ளமையை அருச்சுனன் உணர்ந்துகொண்டான். அவர்களுடைய உரையாடலை இன்பச் சுவை பொருந்துமாறு ஆசிரியர் வருணித்துள்ளார். முடிவில் அருச்சுனத் துறவி தனது உண்மை உருவத்தைச் சுபத்திரைக்குக் காட்

டினன். இருவர் உள்ளங்களும் ஒத்தன. அதுகாலை யில் இந்திரனும், கண்ணனும் அங்குவந்து அவ்விரு வர்க்கும் திருமணத்தை முடித்துவைத்துவிட்டனர். கண்ணனின் ஏவலால் அருச்சுனன் சுபத்திரையைத் தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டான்.

அவர்கள் சென்றபிறகு கண்ணன் தம் தமைய னிடம், அருச்சுனன் தனது போர்த்திறமையால் யாவ ரையும் வென்று, சுபத்திரையை வலிதில் கொண்டு சென்றுவிட்டான் என்று உண்மையை மாற்றிக் கூறினர். அதுகேட்டுச் சினந்த பலராமர் படைக ளுடன் அருச்சுனனைத் தொடர்ந்து சென்றார். அது காலையில் அருச்சுனனது தேரைச் சுபத்திரையே ஒட்டினள். அருச்சுனனும் தன்னைப் பின்பற்றி வந்த வர்களை எளிதில் வென்றான். பிறகு அவன் சுபத்திரை யுடன் இந்திரப் பிரத்தத்தை அடைந்தான். தருமன் முதலியோர் மகிழ்ச்சியோடு அருச்சுனனையும், சுபத்தி ரையையும் வரவேற்றனர். அவ்விருவருக்கும் பிறந்த வீர மகனே **அபிமன்யு** என்பவன். சின்னாட்களில் திரௌபதியும் புதல்வர்கள் ஐவரைப் பெற்றாள். அவர் கள் இளம்பாண்டவர் என்று அழைக்கப்பெற்றனர். இளைஞர்கள் யாவரும் படைக்கலப் பயிற்சி பெறலா யினர். அபிமன்யுவே யாவரினும் சிறந்து விளங்கினன். இவ்வாறு, தீர்த்த யாத்திரைக் காலத்தில் அருச்சுனன் பெண்கள் பலரை மணக்க நேர்ந்தது. அவர்கள்

வாயிலாக அவனுக்கு வீரப் புதல்வர்கள் பலரும் தோன்றினர்.

8. வசந்த காலச் சருக்கம்

இந்நிலையில் வசந்தகாலம் வந்தது. சோலைகள் யாவும் புதிய அழகுடன் பொலிந்தன. வேனில்விழா கொண்டாடப்பட்டது. அருச்சுனன் தனக்குரிய மங்கையருடன் இன்ப விளையாட்டுக்களில் ஈடுபட்டான். வசந்தகாலத்தை வருணிக்கு முகத்தான் ஆசிரியர் வில்லிபுத்தூரார் தமது பாவன்மையையும், பாநலத்தையும் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். அவற்றுள் ஒரு பாடல் வருமாறு :—

“ செங்காவி செங்கமலம் சேதாம்பல்
தடந்தொறும்முத் தீக்க ளாகப்
பைங்காவின் நெடுஞ்சினைக்கை மலர்நறுந்தேன்
ஆகுதிகள் பலவும் வீழ்க்க
உங்கார மதுகரங்கள் ஓங்காரச்
சுருதிஎடுத்(து) ஓத வேள்வி
வெங்காமன் இரதியுடன் புரிந்துதன
தென்றலந்தேர் மேற்கொண் டானே. ”

[**நாவி** - நீலமலர். மூவகை மலர்களும் முத்திக்களைப் போன்று விளங்கின. **கா** - சோலை. திக்களில் ஆகுதி சொரிதலைப் போல் தேன் சொரிந்தது. **மதுகரம்** - வண்டு, **ஓத** - வேதம் ஓத. **வேள்வி** - யாகம்.]

ஆ! எத்துணை அழகிய வருணனை! எத்துணை நயம்! வசந்தகாலக் காட்சியை வேள்விக் காட்சிக்கு ஒப்பிட்டுப் பாடியுள்ளார் ஆசிரியர். என்னே அருமை!

இத்தகைய வேனிற்காலம் சென்றபின்பு கோடை வந்தது. கோடையின் வெம்மை கொடியதாக இருந்தது. எங்கும் அப்பொழுது நீர் கிடைக்க வில்லை கண்ணபிரானும் அருச்சுனனும் ஓரிடத்தில் உரையாடிக் கொண்டிருந்தனர்.

9. காண்டவ தகனச் சருக்கம்

கோடையின் வெப்பம் கொடுமையாக இருந்த காலத்தில் ஒருநாள் தீக்கடவுள் அந்தணர் உருவுடன் அருச்சுனனுக்கு முன் வந்தான். அதுகாலையில் கண்ண

னும் அருச்சுனனுடன் இருந்தார். தீக்கடவுள் இருவரையும் வணங்கி, 'யான் பசியுடன் உள்ளேன். என் பசியைப் போக்கியருளவேண்டும்' என்று வேண்டினன்; அம்மாய அந்தணனது பசியைப் போக்குதற்குக் கண்ணனும், அருச்சுனனும் உறுதியுரை கூறினர். அங்நிலையில் அந்தணர் உருவுடன் வந்த தீக்கடவுள், 'ஐயன்மீர்! யான் தீக்கடவுள். யான் காண்டவம் என்னும் வனத்தை உண்ண விரும்புகிறேன். அக்காடு இந்திரனுக்கு உரியது. யான் அதனை உண்ணத் தொடங்கினல் இந்திரன் ஏழுமேகங்களையும் ஏவி, மழை பொழிந்து என்னை அவித்து விடுவான். நீங்கள் எனக்குக் கூறிய உறுதியுரையின்படி, இந்திரனைத் தடைசெய்து, யான் காண்டவ வனத்தை, அங்குள்ள உயிர்த்தொகுதியுடன் உண்ணுதற்கு உதவவேண்டும்' என்றான். கண்ணனும் அருச்சுனனும் யாது செய்வர்? உறுதியுரை பொய்த்தல் தக்கதோ? அவர்களும் தீக்கடவுள் அக்காட்டை எரித்தற்குத் துணைசெய்ய வேண்டி நேர்ந்துவிட்டது.

பின்பு தீக்கடவுள் காண்டவ வனத்தை எரிக்கலானன். ஆண்டு உறைந்த உயிர்கள் தப்பிச் செல்லாதவாறு அருச்சுனன் காவல் செய்தான். தனக்குரிய காண்டவக்காடு எரிதலை உணர்ந்த இந்திரன், மேகங்களை விடுத்து மழை பொழியுமாறு செய்தான். ஆயின்

அருச்சுனனே அம்புகளை ஏவி, மேகங்கள் மழை பொழியாவண்ணம் தடுத்துவிட்டான். தீக்கடவுளும் தடை ஏதும் இன்றி அவ்வனத்தை எரித்து உண்டு வந்தான்.

காண்டவக்காடு எரியுங்கால், ஆண்டு வாழ்ந்து கொண்டிருந்த **தட்சகன்** என்னும் பாம்பரசன் பெருந் துன்பத்தை அடைந்தான். அப்பாம்பரசன் இந்திர னுக்கு உற்ற நண்பனவான். எனவே இந்திரன் அப் பாம்பரசனையும், அவனது மனைவியையும், மகனையும் காக்க முற்பட்டான். அப்பொழுது தட்சகனது மனைவி, தனது மகனுகிய **அசுவசேனனு**டன் வானத்தே எழுந் தாள். அருச்சுனன் பாம்பரசனது மனைவியின் தலை யைத் துணித்து, நெருப்பில் வீழ்த்தினான். ஆயின், அசுவசேனன் எப்படியோ தப்பினான். அவன் உடனே அம்பாக மாறி, கன்னனை அடைந்து அடைக்கலம் புகுந்துவிட்டான். கன்னனும் அந்தப் பாம்புக்கணை யைப் போற்றித் தன்னிடம் வைத்துக்கொண்டான். அக்கணையினல் அருச்சுனனை எளிதில் கொல்லலாம் என்பது அவன் கருத்து.

காண்டவ வனத்தை எரியாமல் காக்க வந்த இந்திரனுக்கும் அருச்சுனனுக்கும் பெரும்போர் நடந் தது. அப்பொழுது வானத்தே, ' தட்சகன் பிழைத்து

விட்டான். அவனது மகனும் பிழைத்து ஓடிவிட்டான். அருச்சுனனுடன் போர் புரிதல் வேண்டாம். போரை நிறுத்துக!' என்று ஒரு தெய்வக் குரல் அசரீரியாக வானத்தே எழுந்தது. அதனைக் கேட்ட இந்திரனும் போரை ஒழிந்து, தன் இருப்பிடத்தை அடைந்தான்.

காண்டவ வனம் எரிந்துவிட்டது. தேவர்களையும் வெற்றி கொண்ட அருச்சுனனை யாவரும் பாராட்டிப் போற்றினர். திக்கடவுளோ அருச்சுனனுக்கும், கண்ணபிரானுக்கும் தன் நன்றியைச் செலுத்திவிட்டு அகன்றான். பின்பு அருச்சுனன் கண்ணபிரானுடன் இந்திரப் பிரத்தத்தை அடைந்தான். தருமன் முதலியோர் பின்னர் இன்பமாக வாழ்க்கை நடத்தி வந்தனர்.

வில்லிபுத்தூரார் வரலாறு

வில்லிப்புத்தூரார் என்னும் பெயர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய பெரியாழ்வாருக்கு அமைந்த வேறு பெயர் என்றும் ஸ்ரீவில்லிபுத்தூரில் கோயில் கொண்டிருக்கும் திருமாலுக்குப் பெயர் என்றும் கூறுவர். இந்நூலாசிரியர் சிறந்த வைணவப் பரம்பரையைச் சேர்ந்தவராதலால் இவருக்கு இப்பெயர் இடப்பட்டது. இவர் **நடுநாடு** எனப்படும் **திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில்** வைணவ அந்தணர் குலத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் **வீரராகவாச்சாரியார்** என்பவர். வில்லிபுத்தூரார் வட மொழியிலும், தமிழ் மொழியிலும் சிறந்த புலமை பெற்றிருந்தார். இவரை ஆதரித்தவன் வக்கபாகை அரசனாகிய வரபதியாட்கொண்டான் என்பவன்.

ஆசிரியரது சமயம் : இவ்வாசிரியரது சமயம் வைணவம் என்பதற்கு அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் உள்ளன. இவர் வீர வைணவர் என்

றும் பிற தெய்வங்களை வெறுப்பவர் என்றும் சிலர் கூறி, அதற்கு ஏற்ற கதைகளையும் கூறுகின்றனர். அவற்றுக்கு ஏற்ற சான்றுகள் இல. இவர் தமது பாரதத்தில் அருச்சுனன் திர்த்த யாத்திரைச் சருக்கத்தில் சிவபிரானைப் பெரிதும் புகழ்ந்து பாடியுள்ளமையிலிருந்து இவர் பிற கடவுளர்களை வெறுத்தாரல்லர் என்பதனை உணரலாம்.

நூல் இயற்றக் காரணம் : பாரதக் கதை பல புலவர்களின் கருத்தை இழுத்தது போலவே இவரது கருத்தையும் இழுத்தது. இவரை ஆதரித்த அரசனாகிய வரபதியாட்கொண்டானது வேண்டுகோளின் படி இவர் இந்நூலைப் பாடினார் என்று இவரது மைந்தர் பாடியுள்ள பாயிரத்திலிருந்து வெளிப்படுகின்றது. இனி, வில்லிபுத்தூரார்க்கு அவரது உடன் பிறந்தவர்க்கும் தாயப்பாகம் காரணமாக வழக்கு நேரிட்டது என்றும், அவ்வழக்கினைத் தீர்த்துக்கொள்ள அவ்விருவரும் வரபதியாட்கொண்டானிடம் சென்றிருந்தனர் என்றும், அதனை விரும்பாத அரசன் தாயப்பாகம் காரணமாக உடன் பிறந்தவர் போர் செய்வதால் வரும் துன்பங்களைப் புலவர்க்கு நினைவூட்ட எண்ணினன் என்றும், அது

[அடுத்த பக்கம் பார்க்க

முன் பக்கத் தொடர்ச்சி]

பற்றி அவன் பாரதத்தைத் தமிழில் பாடுமாறு புலவரை வேண்டினன் என்றும், அவ்வேண்டுகோளின் படி வில்லிபுத்தூரார் பாரதத்தைப் பாடி முடித்தார் என்றும், தாயபாகம் காரணமாக உடன் பிறந்தவர்களிடத்தில் சச்சரவு நேரிட்டால் துன்பம் வரும் என்னும் உண்மை தானகவே புலவர்க்குப் புலப்பட்டது என்றும், முடிவில் புலவர் வழக்கைத் தொடராமல் விடுத்தார் என்றும் சிலர் கூறுகின்றனர். இந்நூல் வரபதியாட்கொண்டானது அவைக்களத்திலேயே அரங்கேற்றப்பட்டது.

காலம் : வில்லிபுத்தூராரும் அருணகிரிநாதரும் ஒரே காலத்தில் வாழ்ந்தனர் என்று சொல்லப்படுகிறது. அருணகிரிநாதர் விஜய நகரத்து அரசர்களுள் ஒருவராகிய பிரபுட தேவர் என்பவரது காலத்தில் வாழ்ந்தவர் என்று தெரிகின்றது. அவ்வரசர் சிறப்புடன் விளங்கிய ஆண்டு கி. பி. 1477 ஆதலால் வில்லிபுத்தூரார் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது நன்கு விளங்கும்.

Kesari Printing Works, Madras-1.